Wyman English Language Institute
Spoken English
by
S. B. IYAR
புதிய பிரிவுகள் ஆரம்பம்
திங்கள்/புதன்/வெள்ளி
காலை 9 – 10 மணி
12, வைமன் வீதி,
நல்லூர்.

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூ-1/-

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

Wyman English Language Institute
Spoken English
by
S. B. IYAR
புதிய பிரிவுகள் ஆரம்பம்
திங்கள்/புதன்/வெள்ளி
காலை 6 – 7 மணி
12, வைமன் வீதி,
நல்லூர்.

ஏடு: 2 யாழ்ப்பாணம் அக்ஷய ஆண்டு மார்கழி மீ 11 உ வெள்ளிக்கிழமை ஹிஜ்ரி 1407 ரபியு ஆகிர் பிறை 23 (26-12-1986) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர் 26

## யாழ். குடாநாட்டில் குதூகல நத்தார்

யாழ்ப்பாணம், டிச. 26

யாழ். குடாநாட்டில் நேற்று நத்தார் பண்டிகை கொண்டாடப் பட்டது.

பல வருட கால இடைவெளிக்குப் பின் இம்முறை தான் கிறிஸ்தவர்கள் அமைதியாகவும் விமரிசையாகவும் நத்தாரைக் கொண்டாடினார்கள்.

வீடுகள், கடைகள் அனைத்திலும் நத்தார் அலங்காரங்கள் காணப் பட்டன.

பல இடங்களில் இருந்தும் நத்தார் பாடல்களை இசைத்தவாறு கரோல் கோஷ்டியினர் யாழ்நகர் வந்து சேர்ந்தனர்.

தேவாலயங்களில் விசேட பூசைகளும், வழிபாடுகளும் நடைபெற்றன. (உ–10)

## யாழ். கோட்டையில்

யாழ்ப்பாணம், டிச. 26

யாழ். கோட்டை முகாம் சிப்பாய்களும் பட்டாசு கொளுத்தி நத்தார் பண்டிகையைக் கொண்டாடினர்.

நேற்று முழுவதும் போர் நிறுத்தம் அமுல் படுத்தப்பட்டிருந்ததால் நகரில் எதுவித அசம்பாவிதங்களும் நிகழவில்லை.

இதே வேளை யாழ் கோட்டை முகாம் சிப்பாய்கள் முகாமுக்குள் உள்ள கிறிஸ்தவ ஆலயத்தில் நடைபெற்ற பூசையிலும் பங்கு பற்றியதோடு பட்டாசுகளும் கொளுத்தி மகிழ்ந்தனராம். (உ–10)

## தவறுதலாக வெடித்த குண்டினால் பதற்றம்

யாழ்ப்பாணம், டிச. 26

விடுதலைப் புலிகளின் குண்டு ஒன்று நேற்று வெடித்ததால் நகரில் பதற்றம் நிலவியது

யாழ் தபால் கந்தோர் அருகே இக்குண்டு வெடிப்பு நிகழ்ந்ததாக தெரிய வருகிறது

இக்குண்டு தவறுதலாக வெடித்ததாகவும் இதனால் வேறு சேதம் ஏதும் ஏற்படவில்லை எனவும் புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (உ-10)

## முகாமுக்குப் போன உணவுப் பொருள்கள் இடைவழியில்கொள்ளை

கொழும்பு, டிச. 26

மன்னாரில் உள்ள பெரியகுளம் படைமுகாமுக்குக் கொண்டு செல்லப்பட்ட உணவுப் பொருள்கள் அனுராதபுரத்தில் வைத்துக் கொள்ளையிடப்பட்டன.

கடந்த புதனன்று லொறிஒன்றில் பொருள்கள் கொண்டு செல்லப்படுகையிலேயே இக்கொள்ளை நடந்தது.

இது சம்பந்தமாக ஒரு ராணுவச் சிப்பாயும் ஐந்து இளைஞர்களும் கைதுசெய்யப்பட்டு விசாரிக்கப்படுகின்றனர். (உ–ஐ–எ)

## ★ பாப்பரசர் நத்தார்செய்தி

வத்திக்கான், டிச. 26

உலகில் வன்செயல்களும், பகைமையும், பூசல்களும் இல்லாது ஒழிக்கப்பட வேண்டும்.

உலகை மனிதன் அழித்துவிடுவதற்கு எவரும் இடம்தரக் கூடாது.

இவ்வாறு பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பர் தமது நத்தார் செய்தியில் வலியுறுத்தினர்.

சுமார் 20,000மக்கள் கூடியிருந்த வத்திக்கான் சென்ட் பீட்டர் தேவாலய சதுக்கத்தில் ஆற்றிய நத்தார் உரையை உலகில் உள்ள கோடிக்கணக்கான கிறிஸ்தவர்கள் தொலைக்காட்சியில் நேரடியாகக் கேட்டனர் (ஆ)

### சுபநேரம்

26 – 12 –1986
வெள்ளிக்கிழமை
சுபநேரம்:
6·27முதல் – 7· 57 வரை
ராகுகாலம்:
10 57முதல்–12·27 வரை
இவை இரவுக்கும் பகலுக்கும் பொருந்தும்

GLORIA TRAVELS

● கனடா ● நோர்வே
● பிரான்ஸ் ● ஜேர்மனி

ஆகிய நாடுகளுக்கு பிரயாண ஒழுங்குகள் செய்து தருவதுடன்

நோர்வே, கனடா செல்வதற்கு உடனடி பிரயாண ஒழுங்குகள் செய்து தரப்படும்.

* நோர்வே செல்லும் அரிய வாய்ப்பைப் பயன்படுத்துங்கள்.

மற்றும்
பாஸ்போட், பொண்ட் (BOND)
விசா, ரிக்கற்

ஆகியனவும் செய்து கொடுக்கப்படும்.

GLORIA TRAVELS
இன்னத்தம்பி அவெனியூ,
மானிப்பாய்.

## இந்தியா தேவையில்லை; அவர்களை நம்பாது தமிழர்களுடன் நேரடியாகப் பேசுவோம்!

### அமைச்சர் அத்துலத் அறிவிப்பு

கொழும்பு, டிச. 26

இந்திய மத்தியஸ்தத்தினால் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படவில்லை இனியும் இந்தியாவை நம்பாது நாமே தமிழர் குழுக்களுடன் நேரடியாகப் பேசித் தீர்த்துக்கொள்வோம் — இப்படித் தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத்முதலி சொன்னார்.

அவிசாவளையில் நடந்த கூட்டம் ஒன்றில் அமைச்சர் பேசுகையில் சொன்னதாவது:

சிப்பாய்களை விடுவிக்க தீவிரவாதிகளுடன் நேரடிப் பேச்சுக்களை நடத்தி வெற்றி கண்டோம். இதேபோன்று இனப் பிரச்சினைப் பேச்சுக்களை நேரடியாகத் நடத்தித் தீர்வுகாணலாம்.

கொழும்பில் நடந்த கருத்தரங்கு ஒன்றில் பேசுகையில் —

"அடுத்த பொதுத் தேர்தலில் தமிழரை வழிநடத்த புதியதலைமை ஒன்று உருவாகும்"—

(4-ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளைச் சந்திக்க லலித் பெருவிருப்பம்



புலி–லலி சந்திப்பு நடக்கப் போகுதெண்டு சொல்லுங்கோபிள்ளை! காலத்தின் கோலத்தைப் பாத்தியளே!! நடக்கும் என்பார் நடக்காது, நடக்காது என்பார் நடந்துவிடும்!!!

## யாழ். வரும் முதல் அரச குழுவில் சேர்வதற்கு ஆசையாம் அவருக்கு

### ரணராஜா கோரிக்கை நிராகரிப்பு

— கொழும்புச் செய்தியாளர் —

கொழும்பு, டிசம்பர் 26

யாழ்ப்பாணத்துக்குச் சென்று தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கப் பிரமுகர்களைச் சந்தித்துப் பேசுவதற்கு தேசிய பாதுகாப்பு அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலி பெரு விருப்பம் தெரிவித்திருக்கிறார்.

எதிர்வரும் சனிக்கிழமை அல்லது திங்கட்கிழமை யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யவிருக்கும் முதலாவது அரசாங்கக் குழுவிலேயே தாம் இடம்பெற வேண்டும் என்ற தமது ஆசையை அவர் உயர்பீடத்திடம் தெரிவித்திருப்பதாக மிகவும் நம்பிக்கையாகத் தெரியவருகிறது.

இதேவேளை அரசாங்கக் குழுவில் இணைந்து யாழ்ப்பாணம் செல்ல பிரதி நீதி அமைச்சர் திரு. ஷெல்டன் ரணராஜாவும் விருப்பம் தெரிவித்திருந்தார். ஆனால் அவரது கோரிக்கையை உயர்பீடம் நிராகரித்துவிட்டதாகவும் அறிய வந்தது.

முதலாவது அரசாங்கக் குழுவின் யாழ்ப்பாண நல்லெண்ண விஜயம் தொடர்பாக நேற்று இரவு ஜனாதிபதியுடன் பேச்சுக்கள் நடத்தப் பட்டன.

எட்டியாந்தோட்டை எம். பி. திரு. வின்சன்ட் பெரேரா, காங்கேசன்துறை பட்டின சபை முன்னாள் தலைவர் திரு ஜெயபாலசிங்கம் ஆகியோர் ஜனாதிபதியைச் சந்தித்துப் பேசினர்.

சந்திப்பின்போது தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத் முதலியும் கலந்து கொண்டார்.

சந்திப்பு ஒரு மணி நேரம் நீடித்தது. யாழ் நல்லெண்ண விஜயம் மேற்கொள்ளும் தூதுக் குழுவில் யார் இடம்பெறுவது என்பது பற்றி உயர்மட்டத்தில் தீர்மானம் எடுப்பதில் இன்னும் இழுபறி நிலவுவதாக அறிய வந்தது.

இரு தரப்பினருக்கும் இடையே தூதராகப் பணியாற்றுபவர் குறிப்பிடும் பிரமுகர்களை யாழ் அனுப்ப கொழும்பு உயர் பீடம் விரும்பவில்லை என்றும் தெரிய வருகிறது.

ரணராஜா விருப்பம் நிராகரிப்பு

பிரதி நீதி அமைச்சர்

(4–ம் பக்கம் பார்க்க)

## நிதி அமைச்சர் நம்பிக்கை

கொழும்பு, டிச. 26

சமாதானத் தீர்வு காணும் முயற்சியின் இறுதிக்கட்டத்தில் நாம் இருக்கின்றோம்.

— இப்படி நிதிஅமைச்சர் ரொனி டி மெல் கொழும்பில் நடந்த கூட்டம் ஒன்றில் பேசுகையில் குறிப்பிட்டார் (உ–எ)

## கொழும்பில் ஏற்பட்ட இணக்கம்:

# இலங்கை பின்வாங்கியது!

கொழும்பு, டிச. 26

இந்திய இணை அமைச்சர்களுடன் கொழும்பில் நடைபெற்ற பேச்சுக்களின்போது உருவான நிலைப்பாட்டிலிருந்து இலங்கை பின்வாங்கியது.

இலங்கையின் "புதிய நழுவல் நிலை" இந்திய அரசுக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது

ஜனாதிபதி ஜெயவர்த்தன, விசேட செய்தி ஒன்றை இந்தியப் பிரதமர் காந்திக்கு அனுப்பி வைத்திருக்கிறார்.

கடந்த செவ்வாய்க்கிழமை இச்செய்தியுடன் தான் இலங்கைத் தூதர் பெர்னாட் திலகரத்தின புதுடில்லி புறப்பட்டுச் சென்றார்.

கிழக்கு மாகாணத்திலிருந்து அம்பாறைத் தேர்தல் தொகுதியை பிரித்து எடுப்பதற்கு இலங்கை சம்மதிக்காது– இப்படி அச்செய்தியில் ஜனாதிபதி ஜெயவர்த்தன கூறியிருக்கிறார்.

அம்பாறை மாவட்டத்தில் உள்ள ஐந்து எம். பி.க்களும் இதற்கு ஆதரவாக எழுதிய கடிதங்

(4–ம் பக்கம் பார்க்க)

# இந்திய அரசு அதிர்ச்சி!!

புதுடில்லி டிச, 26

கொழும்புப் பேச்சுக்களில் உருவான நிலைப்பாட்டில் இருந்து இலங்கை பின்வாங்கியுள்ளது இந்திய அரசு வட்டாரங்களில்அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

இதன்காரணமாக தமிழர் அமைப்புக்களைச் சந்திக்க இணை அமைச்சர் குழு சென்னை செல்வது பின் போடப்படலாம் என்று இந்தியவட்டாரங்கள் தெரிவித்தன.

அம்பாறைத் தொகுதியை விலக்கி விட்டு கிழக்குமாகாணசபையை அமைப்பது தொடர்பாக, தமிழர் அமைப்புக்களின் கருத்துக்களைப் பெறுவதே இணை அமைச்சர்களின் சென்னை விஜயத்தின் நோக்கம்.

இலங்கை அரசு இந்த நிலைப்பாட்டில் இருந்து பின்வாங்கியிருப்பதால், இணை அமைச்சர் குழு சென்னை விஜயத்தை பின்போட வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளதாம்.

பிரதமர் ராஜீவ் காந்தியுடன் கலந்தாலோசித்த பின்னரே இந்திய அதிகாரிகள் அடுத்த நடவடிக்கை என்ன என்பது பற்றி தீர்மானிப்பர்

ராஜதந்திர வழிகளில் இலங்கையின் புதிய நிலை குறித்து அபிப்பிராயங்கள் பெறப்படலாம்; அல்லது இணைஅமைச்சர்குழு மீண்டும் ஒரு முறை கொழும்பு வரலாம்-இப்படி இந்திய வட்டாரங்கள் தெரிவித்தன. (உ–எ)

## மட்டக்களப்பு எம். பி. பிரபாவைச் சந்திப்பார்

மட்டக்களப்பு, டிச, 26.

மட்டக்களப்பு இரண்டாவது எம். பி. ஜனாப் றிஸ்வி சின்னலெப்பை ஜனவரி முதல் வாரத்தில் சென்னை செல்கின்றார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனைச் சந்திப்பதே அவரின் சென்னைவிஜயத்தின் நோக்கம் என்று தெரியவருகிறது. உ–எ–வ

## போர் நிறுத்தம் மட்டுநகரில் வெற்றி

மட்டக்களப்பு, டிச. 26

நத்தார் தினக்கொண்டாட்டம் எவ்வித அசம்பாவிதங்களும் இன்றி மட்டக்களப்பில் அனுஷ்டிக்கப்பட்டது.

போர் நிறுத்தம் இரு தரப்பினராலும் வெற்றிகரமாக கடைப்பிடிக்கப் பட்டது.

மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் காயங்களுடன் அனுமதிக்கப்பட்டு இருந்த சிப்பாய் ஒருவரை ஆயுதபடையினர் வந்து பார்த்துச் சென்றனர். தேடுதல், ரோந்து நடவடிக்கைகளில் படையினர் ஈடுபடவில்லை. (உ-எ–21)

## போர் நிறுத்தவேளை வல்வையில் சலசலப்பு

யாழ்ப்பாணம், டிச26.

வல்வெட்டித்துறையில் போர் நிறுத்தம் அமுலில் இருந்தபோது இராணுவ முகாமில் இருந்து வெளியேற முயன்ற சிப்பாய்களுக்கு புலிகள் எச்சரிக்கை வேட்டுக்களைத் தீர்த்து முகாமுக்குள் திருப்பி அனுப்பினர்.

இச்சம்பவம் பற்றி தெரிய வருவதாவது:–

வல்வெட்டித்துறை இராணுவ முகாமில் இருந்து சற்றுதூரத்திற்கு அப்பால் போடப்பட்டிருக்கும் வீதித்தடையை அகற்றுவதற்காகசிப்பாய்கள் வெளியேறினர்.

இதனைக் கண்ணுற்ற விடுதலைப் புலிகள் "இன்று போர் நிறுத்தம்,வெளியே வராதீர்கள்" எனக்கத்திஆகாயத்தைநோக்கி துப்பாக்கி வேட்டுக்களைத்தீர்த்தனர்

சிப்பாய்களும் பதிலுக்கு சுட்டுவிட்டு முகாமை நோக்கி திரும்பிச் சென்றனர். (உ-10)

## தாளங்குடாவில் 5 போராளிகள் பலி

மட்டக்களப்பு, டிச. 26

மட்டக்களப்பு தாளங்குடாவில் இடம் பெற்ற இயக்கங்களுக்கு இடையேயானமோதலில் ஐந்து போராளிகள் உயிரிழந்தனர்.

உயிரிழந்தவர்களில் 2 பேர் ஓர் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் 3பேர் மற்றோர் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள்.

புதன்கிழமைஇரவு ஏற்பட்ட வாக்குவாதத்தைத் தொடர்ந்து ஏற்பட்ட மோதலில் ஓர் இயக்கத்தைச் சேர்ந்த 2 போராளிகள் உயிரிழந்தனர். அதன் பின்னர் நேற்றுக்காலை மீண்டும் மோதல் ஏற்பட்டது அப்போது மற்ற இயக்கத்தைச் சேர்ந்த 3 போராளிகள் உயிரிழந்தனர்.

மோதல் அதன் பின்னர் இடம்பெறவில்லை. (உ–எ-21)

## முடிவு கிட்டும் வரை மறியற் போர் தொடரும்

### அடகுவைத்தோர் சங்கம் அறிவிப்பு

யாழ்ப்பாணம், டிச. 26

தீர்க்கமான முடிவு கிடைக்கும் வரை அடகு வைத்தோர் சங்கம் மக்கள் வங்கிக் கிளைகள் முன் மறியல் இயக்கத்தைத் தொடர்ந்து நடத்தும்.

—இப்படி அடகுவைத்தோர் சங்கச் செயலாளர் அறிவித்து இருக்கிறார்.

ஏற்கனவே வங்கி நிர்வாகத்துடன் நடத்தப்பட்ட பேச்சுக்கள் தொடர்பாக சங்கம் தனது கோரிக்கைகளை எழுத்துமூலம் வெள்ளிக்கிழமை சமர்ப்பிக்க இருக்கிறது.

மக்கள் வங்கி அதிகாரிகள் இக்கோரிக்கைகளை எடுத்துக் கொண்டு

(4ஆம் பக்கம் பார்க்க)

## 282 பேர் கைது

சென்னை, டிச. 25

மணப்பாறை என்னும் இடத்தில் தடை உத்தரவை மீறி ஊர்வலம் செல்ல முயன்ற 282 திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர்கள் பொலீஸாரால் இன்று கைது செய்யப்பட்டனர். (உ–எ)

## விடுவித்தபோதே விடுதலையானவர் மேஜர் அருணாவே என்பது அரசுக்கு தெரிந்திருந்தது

### புலிகளுக்கு அவரால் பயன் இருக்காதாம்

சென்னை, டிச. 25

கைதிகள் பரிமாற்றத்தின்போது விடுதலை செய்யப்பட்ட புலிகளில் ஒருவர் மேஜர் அருணா. மட்டக்களப்பு பிராந்திய தளபதியாக பணியாற்றியவர் அவர்.

அந்த விடயம் இலங்கை அரசுக்கு அவரைவிடுவித்த போதே தெரிந்திருந்தது.

இப்படி 'இந்து' நாளிதழ் செய்தி வெளியிட்டது.

மேஜர் அருணாதான் வெலிக்கடையில் சிறை வைக்கப்பட்டார் என்பது எமக்கு தெரிந்திருந்தது - இப்படி கொழும்பு அரசு வட்டாரம் தெரிவித்ததாக 'இந்து' செய்தி மேலும் கூறியது.

'இந்து' செய்தியில் மேலும் தெரிவிக்கப் பட்டு இருப்பதாவது;

கடற்படையினரால் பிடிக்கப்பட்டபோது மேஜர் அருணா, தான் படகுக்காரன் செல்வசாமி செல்லக்குமார் என்று கூறிக்கொண்டார்

தனது முகத்தில் ஏற்பட்ட எரிகாயங்களைப் பயன்படுத்தி இப்படி தனது பெயரை அவர் மாற்றித் தெரிவித்தார்.

வெலிக்கடைச் சிறையில் வைக்கப்பட்டுள்ள செல்லக்குமார், மேஜர் அருணாதான் என்பது தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு தெரிந்து விட்டது. அதைத் தொடர்ந்தே கைதிகள் பரிமாற்றத்தின் போது செல்லக்குமாரின் பெயர் கொடுக்கப்பட்டது

"கைதானபோது ஏற்பட்ட காயங்களினால் மேஜர் அருணாவின் உடல் நிலைபோராடுவதற்குஏது வாக இல்லை தமிழீழ விடு

(4–ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய கலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# பெரும் பகுதி பாட புத்தகங்கள் வந்து சேர்ந்துவிட்டன

## போக்குவரத்துப் பிரச்சினையால் மிகுதி வருவதில் தாமதம்

பலாலி, டிச. 26

அடுத்த ஆண்டுக்குரிய புதிய வகுப்புகளுக்கான பாடப்புத்தகங்களில் பெரும்பகுதி கொழும்பில் இருந்து அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

மூன்று தடவைகளில் ஒருலட்சத்து 45 ஆயிரத்து 60 புத்தகங்கள் கடந்த 24-ந் திகதிவரை அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இன்னும் மூன்று தடவைகளில் அனுப்பக்கூடிய புத்தகங்கள் தற்போது அனுப்புவதற்கு ஆயத்த நிலையில் இருப்பதாகவும் போக்குவரத்துப் பிரச்சினையே புத்தகங்களை யாழ்ப்பாணத்திற்குக் கொண்டுவருவதற்கான தாமதத்துக்குக் காரணம் என்றும் கல்வி வெளியீட்டுத் திணைக்கள அதிகாரி ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார். (இ-119)

## சின்னஞ் சிறு விளம்பரங்கள்

### விற்பனைக்கு

27, 28-12-86ஆம் திகதிகளில் இளவாலை புனித கென்றியரசர் கல்லூரியில் நடைபெறவிருக்கும் பொருட்காட்சியில் மில்க்வைற் விற்பனைக் காட்சிச்சாலையில் ரூ. 15/-இற்கு மில்க்வைற் தயாரிப்புக்களை வாங்கும் அன்பர்களுக்கு அழகிய பொலித்தீன் பாக்கும், புது வருஷ கலண்டரும், கீரை விதைகளும் மரக்கன்றும் மற்றும் மில்க்வைற் வெளியீடுகளும் அன்பளிப்பாக வழங்கப்படும். மில்க்வைற் தயாரிப்புகளின் மேலுறைகளைச் சேகரித்து வைத்திருப்போர் அங்கு கொடுத்து பெறுமதி வாய்ந்த பரிசுகளைப் பெற்றுக்கொள்ளலாம். மில்க்வைற்-யாழ்ப்பாணம்.

பழைய பத்திரிகைகள் விற்பனைக்குண்டு. எழுத்துமூலம் விலைகள் கோரப்படுகின்றன. விளம்பரதாரர், 207. மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

## புலிகள் தாக்குதல்

யாழ்ப்பாணம். டிச 26

மட்டக்களப்பு குறுமண்வெளி என்ற இடத்தில் அதிரடிப்படையினர் சுற்றி வளைத்துத் தேடுதல் நடத்த முற்பட்டபோது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினர்.

இத் தாக்குதலின் போது இரண்டு விடுதலைப்புலிகள் இறுதி நேரம் வரை போராடி வீர மரணமடைந்தனர். இச்சம்பவம் செவ்வாய்க்கிழமை நடந்தது.

கிருஷ்ணா, இரண்டாவது லெப்டினன்ட் கோபு ஆகிய இருவருமே வீர மரணமடைந்தவர்கள் ஆவர். (இ 10)

## மண்டைதீவு இறங்குதுறை சிரமதானம் மூலம் புனரமைப்பு

மண்டைதீவு, டிச.26

மண்டைதீவு இறங்குதுறை சிரமதான பணி மூலம் புனரமைக்கப்பட்டு வருகின்றது.

மண்டைதீவு சந்தியில் மினி இராணுவ முகாம் அமைக்கப்பட்டதன் காரணமாக இப்பகுதி பிரதான வீதி (பண்ணை வீதி) துண்டிக்கப்பட்டுள்ளது

இதன் காரணமாக இங்குள்ள பிரயாணிகள் தங்கள் பிரயாணத்தை குறைந்த கட்டணத்துடன் மேற்கொள்வதற்கு படகுச் சேவையையே நாடி வருகின்றார்கள்.

கடற்கரையில் இருந்து சுமார் 200 யார் தூரம் பாலம் விஸ்தரிப்பதால் பிரயாணிகள் கஷ்டமின்றி பிரயாணத்தை மேற்கொள்ள வசதியாக இருக்கும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விஸ்தரிப்பு வேலைகளுக்கு குறைந்தது எட்டு குழாய்கள் பொருத்த வேண்டியிருப்பதால் இக்குழாய்களை பெருந்தெருக்கள் திணைக்களத்திடமிருந்து பெற்றுத் தருமாறு கோரப்பட்டுள்ளது. (இ-88

## முகாமில் இறந்தவரின் மரணவிசாரணை ஒத்திவைப்பு

காங்கேசன்துறை, டிச. 26

காங்கேசன்துறை ஹாபர் வியூ இராணுவ முகாமில் தற்கொலை செய்துகொண்ட சஞ்சீவி சிவலிங்கம் என்பவரின் மரணம் சம்பந்தமான தீர்ப்பு மல்லாகம் பதில் நீதிவான் திரு ஜி. வி. பாலசிங்கத்தினால் வேறொரு திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

மரண விசாரணையில் இராணுவ சிப்பாய்களான ஏ. எல். பிரேமசந்திரா, கே. ரணசிங்கா சாட்சியமளித்தனர்.

தண்ணீருடம் கொடுக்கப்பட்ட போத்தலை உடைத்து அதனால் தன்னைக் குத்தித் தற்கொலை செய்துகொண்டார் இறந்தவர் என்று தெரிவித்தனர்.

மரணத்தில் சந்தேகம் இல்லை என்று இறந்தவரின் மனைவி மேரி புஷ்பம் சாட்சியத்தில் தெரிவித்தார்.

பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்ட பதில் நீதிவான், தீர்ப்பை வேறொரு திகதிக்கு ஒத்தி வைத்தார்.

மரண விசாரணை ஹாபர்வியூ ஹோட்டல் முகாமில் நடந்தது. சார்ஜன்ட் கே. பொன்னுத்துரையின் உதவியுடன் சப்இன்ஸ்பெக்டர் எஸ். சுந்தரநாதன் சாட்சியத்தை நெறிப்படுத்தினார் (உ-எ-68)

## ஸ்கந்தவரோதயாவில் 6 ஆம் ஆண்டுக்கான பரீட்சை

சுன்னாகம், டிச 26

சுன்னாகம் ஸ்கந்தவரோதயா கல்லூரியில் ஆண்டு ஆறுக்கு அனுமதி பெறுவதற்கான பரீட்சைகள் 28 ஆம் திகதி ஞாயிறு காலை. 9.00 மணிக்கு கல்லூரியில் நடைபெறும்.

அதிபர் திரு. பி. நாகரத்தினம் உதயனிடம் இதனைத் தெரிவித்தார்.

தமிழ். கணிதம் ஆகிய இரு பாடங்களிலும் பரீட்சை நடைபெறும். (இ-27)

## நத்தார் விழா

யாழ்ப்பாணம், டிச 26

நத்தார்விழா 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 30 முதல், 11 மணிவரை திருநெல்வேலி வடக்கு இராமகிருஷ்ணாலயத்தில் நடைபெறும்.

விழாவில் நத்தார்கீதம் யாழ் சென் பீற்றஸ் தேவாலய பாடகர்களால் பாடப்படும்.

நத்தார் செய்தியை வணக்கத்திற்குரிய கே. பி. கோவிந்தராஜ் வழங்குவார். (இ-10)

*

பருத்தித்துறை, டிச 26

பருத்தித்துறை கத்தோலிக்க மாணவர் ஒன்றியத்தினர் நாளை 27ஆம் திகதி சனிக்கிழமை மாலை புற்றளை மகாவித்தியாலய ஹாட்லி அரங்கில் கிறிஸ்மஸ் ஒளிவிழாவைக் கொண்டாடவுள்ளனர்.

விழாவில் பருத்தித்துறை கல்விவட்டார பாடசாலை மாணவர்களினதும் யாழ். பல்கலைக்கழக கத்தோலிக்க மாணவர்களினதும் சிறப்புக் கலை நிகழ்ச்சிகள் இடம்பெறும். (இ-118)

*

சாவகச்சேரி, டிச 26

அறவழிப் போராட்டக்குழுவினர் நத்தார் விழாவை நாளை 27ஆம் திகதியன்று கொண்டாட இருக்கின்றனர்.

அறவழிப்பணிமனையில் இடம்பெறும் இவ்வைபவத்தில் பனம்பொருள் அபிவிருத்திச்சபைத் தலைவர் திரு. க நடராசா, சாவகச்சேரி லயன்ஸ் கழகத் தலைவர் வைத்திய கலாநிதி பே. பிலிப்ஸ் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து சிறப்பிப்பர் (உ-31)

## சிப்பாய்கள் வாழ்த்து

மட்டக்களப்பு, டிச. 26

அமைதிக்குப் பிரார்த்திப்போம். நாளை ஒன்றும் செய்யமாட்டோம்.

மட்டக்களப்புக் கடைகளில் நத்தார்ப் பொருள்கள் வாங்க வந்த பொது மக்களை சிப்பாய்கள் இப்படி வாழ்த்திச் சென்றனர்.

நேற்று மாலை மட்டக்களப்பு நகரில் இச் சம்பவம் இடம் பெற்றது

வழமையாக மாலை 5 மணியுடன் கடைத்தெரு சந்தடி அடங்கிவிடும்.

ஆனால் நேற்று இரவு 7 மணிவரை சந்தடி இருந்தது பொதுமக்கள் கடை வீதிகளில் திரளாக நடமாடுவதைக் காணமுடிந்தது.

சிப்பாய்களும் கடைகளுக்கு வந்து பொருள்களை வாங்கிச்சென்றனர். (இ-எ-21)

## மூவர் மீது விசாரணை

மட்டக்களப்பு, டிச. 26

காத்தான்குடியில் அண்மையில் ஊர்காவல் படையினர் மீது நடத்தப்பட்ட தாக்குதல் சம்பவம் தொடர்பாக மூன்று முஸ்லிம் பிரமுகர்கள் நேற்று கல்லடி முகாமுக்கு அழைக்கப்பட்டு ஆயுதப்படையினரால் விசாரிக்கப்பட்டனர்.

மூவரில் ஒருவர் காத்தான்குடி பட்டினசபையின் முன்னாள் தலைவரான அல்ஹாஜ் அகமது லெவ்வை ஏ கே. அபூபக்கர், எம். கரீம் ஆகியோர் ஏனையவர்.

போராளிகளுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரிலேயே இவர்கள் மீது விசாரணை நடத்தப்பட்டது பின்னர் இவர்கள் விடுவிக்கப்பட்டனர். (உ-எ-21)

## அச்சுவேலி மகாவித்தியாலய பழைய மாணவர்சங்க புனரமைப்புக் கூட்டம்

அச்சுவேலி, டிச. 26

அச்சுவேலி மகாவித்தியாலய பழைய மாணவர்சங்க புனரமைப்புச் கூட்டம் நாளை 27ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறும்.

பழைய மாணவர் சங்கத்தை புனரமைப்புச் செய்து மீண்டும் செயற்படுத்துவதற்காக இணைப்புக்குழு ஒன்று தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த இணைப்புக் குழு பொதுக்கூட்டத்துக்கான ஏற்பாட்டைச் செய்துள்ளது. (இ-11)

## தயாபத்திரன கொலை
## யாழ். பல்கலைக்கழகம் கண்டித்து அறிக்கை

யாழ்ப்பாணம், டிச. 26

கொழும்பு பல்கலைக்கழக சுயாதீன மாணவர் ஒன்றியத்தின் தலைவர் தயா பத்திரன கடத்திச் செல்லப்பட்டு வெட்டிக் கொலை செய்யப்பட்டதையும் முக்கிய உறுப்பினர் பி. ஆர். சோமசிறி தாக்கப்பட்டதையும் யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் வன்மையாகக் கண்டித்துள்ளனர்.

இது சம்பந்தமாக பல்கலைக்கழக மாணவர்கள் வெளிட்டுள்ள அறிக்கை ஒன்றில் கொழும்பு பல்கலைக்கழக சுயாதீன மாணவர் ஒன்றியம் எமது பல்கலைக் கழக மாணவர் அவையுடன் நீண்ட காலமாக நெருங்கிய தொடர்பு வைத்திருந்தது.

எம்மால் அரசுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் போராட்டங்களுக்கு ஆதரவு வழங்கி வந்துள்ளது என்று தெரிவித்துள்ளது. (இ-10)

## ஆஸ்பத்திரி ஊழியர் கைது

மட்டக்களப்பு, டிச 26

மட்டக்களப்பு அரச ஆஸ்பத்திரி மேற்பார்வையாளர்ஒருவர் புதன்று ஆயுதப்படையினரால் கைது செய்யப்பட்டார்.

காயம் அடைந்த போராளிகளுக்கு மருந்து கட்டி வந்தார் என்ற தகவலைத் தொடர்ந்தே இவர் கைதானார்.

களுவாஞ்சிக்குடியைச் சேர்ந்த ஒருவரே கைது செய்யப்பட்ட ஊழியர். (அ-எ-21)

## மக்கள் முகம்

### உடுவில் கிராமிய நீதிமன்றம்

மானிப்பாய், டிச 26

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் ஆதரவில் ஏழுபேர் கொண்ட கிராமிய நீதிமன்றம் ஒன்று அண்மையில் உடுவிலில் அமைக்கப்பட்டது.

இதன் உறுப்பினர்கள் விவரம் வருமாறு;

திரு. என். செல்வராசா (செயலாளர்) திரு. எஸ். எஸ். நவரத்தினம், இணைச் செயலாளர்.

மற்றும்உறுப்பினர்கள் திரு. எஸ். நவரத்தினம் பீற்றர், திரு. பூதத்தம்பி, திரு எஸ். குருகுலசிங்கம் திரு. பிரான்சிஸ், திரு. சி எஸ். கனகசிங்கம்.

ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் இம்மன்றம் கூடி வழக்கு விசாரணைகளை நடத்தும். (இ-90)

### இடமாற்றம்

சாவகச்சேரி, டிச.23

சவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் திரு. க. துரைராசா ஜனவரி மாதம் 15 ஆம் திகதி முதல் கிளிநொச்சிக்கு இடமாற்றம் செய்யப்பட்டார்.

திரு. துரைராசா சுமார் ஏழுகண்டு காலம் இப்பகுதியில் கடமையாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-31)

## புதிய கட்டடம்

யாழ்ப்பாணம், டிச 26

மினி முகாமாக இருந்து பின்னர் தகர்க்கப்பட்ட வயாவிளான் மத்திய மகாவித்தியாலயத்திற்கு புதிய கட்டடம் ஒன்று கட்டுவதற்கு கென யாழ் மாவட்ட அபிவிருத்திச் சபை 2 லட்சத்து 25 ஆயிரம் ரூபாவை ஒதுக்கியுள்ளது.

இப்புதிய கட்டடம் கல்லூரி தற்போது தற்காலிகமாக இயங்கிவரும் புன்னாலைக்கட்டுவன் ஆயாக்கடவை மத்திய மகாவித்தியாலயத்தில் கட்டப்படவுள்ளது. (உ-5)

## சுவரொட்டிகள்; எதிர்ப்பு நன்றியாக மாறிய விதம்!

மட்டக்களப்பு,டிச 26

தமிழருக்கு எதிராக ஒட்டப்பட்ட சுவரொட்டிகளை ஒட்டியவர்களைக் கொண்டே கிழித்தெறிந்து விட்டு,போராளிகளுக்கு நன்றி கூறும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன.

இச் சம்பவம் காத்தான்குடியில் புதனன்று இடம் பெற்றது.

இரண்டு முஸ்லிம் வர்த்தகர்கள் கடத்தப்பட்டுக் கொலை செய்யப்பட்ட சம்பவத்தை வைத்து இனக்கலவரம் ஒன்றை ஏற்படுத்தக் கூடிய விதத்திலான சுவரொட்டிகளை ஒட்டிக் கொண்டிருந்தஇரண்டு முஸ்லிம் நபர்களை, முஸ்லிம் இளைஞர்கள் கையும் மெய்யுமாகப் பிடித்து பள்ளிவாசல் நிர்வாகிகளிடம் ஒப்படைத்தனர்.

விசாரணையின் பின்னர் ஒட்டியவர்களைக் கொண்டே சுவரொட்டிகள் கிழித்தெறியப்பட்டன.

பின்னர் முஸ்லிம் இளைஞர்கள் புதிய சுவரொட்டிகளை ஒட்டினர்,

கொலை செய்யப்பட்ட முஸ்லிம் வர்த்தகர்களின் சடலங்களை மீட்டுக் கொடுத்ததற்கு போராளிகளுக்கு நன்றி தெரிவித்த இச் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன. (உ-எ-21)

## பரிசளிப்பு விழா

சாவகச்சேரி, டிச 26

சாவகச்சேரி தென்னிந்திய திருச்சபையின் ஓய்வுநாட் பாடசாலைப் பிள்ளைகளின் விழாவும் பரிசளிப்பும் இம்மாதம் 30 ஆம் திகதி (செவ்வாய்க்கிழமை) நடைபெறவிருக்கிறது.

நத்தார் புத்தாண்டு ஆகியவையை ஒட்டி மேற்படி சபையினர் இவ்வேற்பாட்டைச் செய்துள்ளனர்.

சபை ஊழியர் திரு. என். சி. ஆனல்ட் தலைமையில் இவ்வைபவம் இடம்பெறும். (உ-31)

## மின்சார சபைக்கு செலுத்த வேண்டிய
# நிலுவைப்பணம் 3கோடி:
## கொழும்பில் ஜன. 2 இல் மாநாடு

யாழ்ப்பாணம். டிச 26

யாழ் மாவட்ட அபிவிருத்திச்சபை இலங்கை மின்சார சபைக்கு செலுத்த வேண்டிய நிலுவைப் பணமான 3கோடி ரூபா பற்றிய விசாரணைக் கலந்துரையாடல் ஜனவரி மாதம் 2 ஆம் திகதி கொழும்பில் உள்ள உள்ளூராட்சி அமைச்சு அலுவலகத்தில் நடைபெறும்.

இக்கலந்துரையாடலில் அபிவிருத்திச்சபைச் செயலாளர் திரு. மு. பஞ்சலிங்கம், உதவிச் செயலாளர் திரு. எஸ். பரமநாதன், பிரதம கணக்காளர் திரு. எம். கே. ராஜேந்திரன் ஆகியோர் கலந்து கொள்வர்.

கடந்த இருமாதங்களாக 75 லட்சம் ரூபா நிலுவைப்பணமாக மின்சாரசபைக்கு கொடுக்கப்பட்டுள்ளது.

சட்டவிரோத மின் பாவனையாலும், மீற்றர் குழறுபடியாலும், பாவனையாளர் நிலுவைகளைச் செலுத்தாததாலுமே 3 கோடி ரூபா வரை நிலுவை ஏற்பட்டது. பொதுமக்கள் தமது மின்சார பாவனைக்கான கட்டண நிலுவைகளை உடன்செலுத்தி உதவ வேண்டும்.

மாவட்ட அபிவிருத்திச் சபை உதவிச் செயலாளர் மேற்கண்டவாறு வேண்டுகோள் விடுத்தார். (இ-5)

## தளபாடங்களுக்கு ரூபா ஏழரை லட்சம்

யாழ்ப்பாணம் டிச.26

யாழ் மாவட்டப் பாடசாலைகளின் தளபாடங்களுக்கென 7 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவை யாழ் மாவட்ட அபிவிருத்திச்சபை நிதியிலிருந்து அரச அதிபர் ஒதுக்கியுள்ளார்.

இதன் மூலம் ஓரளவு தளபாடப் பற்றாக்குறைப் பிரச்சினைகள் தீர்க்கப் படலாம் என அபிவிருத்திச் சபை பிரதம கணக்காளர் திரு. எம். கே. ராஜேந்திரன் தெரிவித்தார். (இ-5)

## குறுக்கு வழியில் அரசியல் இலாபம் தேடுவது தம் நோக்கம் அல்ல என்கிறார் விஜே

கொழும்பு, டிச 26

குறுக்கு வழியில் அரசியல் இலாபம் தேடுவது என் இலட்சியம் அல்ல.

இப்படி ஸ்ரீலங்கா மக்கள் கட்சிச் செயலாளர் விஜய குமாரணதுங்க தெரிவித்தார்.

யாழ் விஜயம் பற்றி அரசியல் எதிரிகள் கூறி வரும் கருத்துக்களுக்குப் பதிலளிக்குமுகமாகவே விஜய குமாரணதுங்க இப்படித் தெரிவித்தார்.

பதவிக்கு வரும் குறுகிய காலத்திட்டம் எதையும் நான் கொண்டிருக்கவில்லை சந்தர்ப்பவாத குறுக்கு வழிகளில் எனக்கு நம்பிக்கை இல்லை.

நாட்டில் ஸ்திரமின்மையை ஏற்படுத்த இன, மத குரோதங்களைத் தூண்டிவிடுவது இலகுவானது.

அப்படி உருவாக்குபவர்கள் அதற்கே பலியாவார்கள் என்பதை சரித்திரம் காட்டுகிறது

நாடு பிளவுபடும் நிலையில் இருக்கும்போது எப்படி அரசியல் நடத்துவது?

நாம் நேர்மையான அரசியலில் தான் நம்பிக்கை வைத்துள்ளோம்.

இப்படி விஜய குமாரணதுங்கா சொன்னார். (இ-எ)

## 30 பாடசாலைகளுக்கு கட்டட நிதி ஒதுக்கீடு

யாழ்ப்பாணம், டிச 26

அடுத்த ஆண்டில் யாழ் மாவட்டத்திலுள்ள 30 பள்ளிக் கூடங்களுக்கு புதிய கட்டடங்கள் கட்டுவதற்காக யாழ் மாவட்ட அபிவிருத்திச் சபை நிதியிலிருந்து 61 லட்சம் ரூபாவை அரச அதிபர் ஒதுக்கியுள்ளார்.

இந்நிதி பாடசாலைகளுக்கு தொகுதி வாரியாக ஒதுக்கப்பட்டுள்ளதாக அபிவிருத்திச்சபையின் பிரதம கணக்காளர் திரு கே எம். ராஜேந்திரன் தெரிவித்தார்.

ஊர்காவற்றுறைத் தொகுதியிலுள்ள 3 பாடசாலைகளுக்கு 3 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவும், வட்டுக்கோட்டைத் தொகுதியிலுள்ள 2 பாடசாலைகளுக்கு 4 லட்சத்து 15 ஆயிரம் ரூபாவும், காங்கேசன்துறைத் தொகுதியிலுள்ள 3 பாடசாலைகளுக்கு 5 லட்சம் ரூபாவும், மானிப்பாய்த் தொகுதியிலுள்ள 4 பாடசாலைகளுக்கு 5 லட்சம் ரூபாவும், கோப்பாய்த் தொகுதியிலுள்ள 6 பாடசாலைகளுக்கு 6 இலட்சத்து 35 ஆயிரம் ரூபாவும், உடுப்பிட்டித் தொகுதியிலுள்ள 2 பாடசாலைகளுக்கு 6 லட்சத்து 90 ஆயிரம் ரூபாவும், பருத்தித்துறைத் தொகுதியிலுள்ள 2பாடசாலைகளுக்கு 6 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவும், சாவகச்சேரித் தொகுதியிலுள்ள 3பாடசாலைகளுக்கு 5 லட்சத்து 30 ஆயிரம் ரூபாவும், நல்லூர்த் தொகுதியிலுள்ள 2 பாடசாலைகளுக்கு 4 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவும், யாழ்ப்பாணத் தொகுதியிலுள்ள 6 பாடசாலைகளுக்கு 14 லட்சம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (இ-5)

## மாணவர் கல்வியை இடை நிறுத்துவதற்கு பெற்றோரே காரணம்

கரவெட்டி, டிச. 26

மாணவர்கள் ஆரம்பக்கல்வியுடன் படிப்பை இடைநிறுத்துவதற்குப் பெற்றோர்களேகாரணம்.

அரசடி கல்வி நிலையப் பரிசளிப்புவிழாவிற் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட திரு ஆ. வ. தங்கராஜா மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

திரு. எஸ். பூரணம் பிள்ளை தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் திரு தங்கராஜா மேலும் பேசுகையில் கல்விச் செல்வம் என்பது ஓர் அழியாத செல்வமாகும். இதைக் கருத்தில் கொண்டு கல்வியைக் கற்கமாணவருக்குப்பெற்றோர் ஊக்கமளிக்கவேண்டும் என்றார்

திரு. ஆ. வ. தங்கராஜா பரிசில்களையும் வழங்கினார். [illegible] இடம்பெற்றன. (இ-70)

## கடமைகளை செய்ய மறுப்பு

கொழும்பு.டிச.26

யாழ்ப்பாணம், ருகுணு பல்கலைக்கழகங்களைத் தவிர்ந்த ஏனைய பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் ஜனவரி 5 ஆம் திகதியில் இருந்து நிர்வாகக் கடமைகளை மேற்கொள்வதில்லை என்று முடிவு செய்துள்ளனர்.

கடந்த திங்கட்கிழமை கொழும்பில் நடத்தப்பட்ட செய்தியாளர் மாநாட்டில் இத்தகவல் வெளிடப்பட்டது.

சம்பள உயர்வு கோரியே பேராசிரியர்களும் விரிவுரையாளர்களும் இந்தநடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். (உ-ஜ-எ)

## கொள்ளை

யாழ்ப்பாணம் டிச 26

யாழ்ப்பாணத்தில் உள்ள முஸ்லிம் ஒருவருக்கு சொந்தமான கடை ஒன்றில் இருந்து ஆயிரக்கணக்கான ரூபா பெறுமதியுள்ளபுடைவைகள் கொள்ளையடிக்கப் பட்டுள்ளன.

## விளையாட்டரங்கு

### உதைபந்தாட்ட
## மத்தியஸ்தர் சங்கம் லீக்கிலிருந்து நீக்கம்

யாழ்ப்பாணம், டிச. 26

யாழ் உதைபந்தாட்ட லீக்கிலிருந்து யாழ் உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கம் நீக்கப்பட்டிருக்கிறது

கடந்த 20 ஆம் திகதி நடைபெற்ற லீக்கின் நிர்வாக சபைக் கூட்டத்தில் யாழ் உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தின் பிரதிநிதித்துவத்தை ரத்துச் செய்வதென முடிவு செய்யப்பட்டது.

இப்படி உதைபந்தாட்ட லீக்கின் செயலாளர் திரு. எம். தேவராஜா அறிவித்திருக்கிறார்.

இதுபற்றி இலங்கை உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்திற்கும் அறிவிக்கப்பட்டிருப்பதாக அவர் தெரிவித்தார். (உ)

## ஐயனார் கோயிலடி சனசமூக நிலைய கரபந்தாட்ட போட்டி

யாழ்ப்பாணம், டிச.26

வண்ணார்பண்ணை ஐயனார் கோயிலடி சனசமூக நிலையத்தினரின் இரண்டாவது கரபந்தாட்ட சுற்றுப் போட்டி ஆரம்பமாக வுள்ளது.

பங்குகொள்ள விரும்பும் கழகங்கள் ஜனவரி 5 ஆம் திகதிக்கு முன் விண்ணப்பிக்கும் படி கோரப்பட்டுள்ளன. (இ)


COMPUTER PROGRAMMING
in
BASIC LANGUAGE

Practical: Singlair QL and ZX Spectrum
(கூடிய நேர செய்முறைப் பயிற்சியுடன்)
RADIO and T V Repairing
WIRING
புதிய பிரிவுகள் ஆரம்பம் 29-12-86 9 a.m.

Able Technical Studies
கே. கே. எஸ். வீதி, சுன்னாகம்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

**உதய சங்கற்பம்**

ஒருவன் பிறர்க்குக் கேடு சூழ்வதால் தனக்கே கேடு சூழ்ந்து கொள்கிறான்.
—ஹெஸியாட்

உதயன்

உண்மை - நேர்மை - நடுநிலைமை

இல,15 2ஆவது ஒழுங்கை தொலைபேசி: 24805
மின்சார நிலைய வீதி, 22073
யாழ்ப்பாணம் 26-12-1986 த. பெ இல 23

# அரசின் இராணுவமய ஆசைக்கு ஓர் ஆப்பு!

இராணுவ மயத்தில் அரசாங்கத்துக்கு இருக்கும் ஆசைக்கு ஆப்பு வைக்கப்பட்டிருக்கிறது! உயர்நீதி மன்றம் அண்மையில் வழங்கிய தீர்ப்பு ஒன்றைப்பற்றியே இங்கு குறிப்பிடுகிறோம்.

ரயில்வே பாதுகாப்பு ஊழியர்கள் தொடர்ந்த மனித உரிமை மீறல் சம்பந்தமான வழக்கில் அரசு தோற்றுவிட்டது.

ரயில்வே பாதுகாப்புச்சேவை ஊழியர்கள் இராணுவப் பயிற்சி பெறவேண்டும் என்று அரசாங்கம் அவர்களுக்கு உத்தரவிட்டது

தாம் சேவையில் சேர்ந்தபோது இராணுவப் பயிற்சிக்கு உடன்படவில்லை என்றும் தமக்கு அந்தப் பயிற்சி பெறுவதற்கு விருப்பம் இல்லை என்றும் ஊழியர்கள் எடுத்துச் சொன்னார்கள். அரசின் காதில் ஏறவில்லை

அவர்கள் பன்னலவில் உள்ள இராணுவ முகாமுக்குச் சென்று பயிற்சி பெறத்தான் வேண்டும் என்று அரசு — ரயில்வே திணைக்களம் கட்டாயப்படுத்தியது. பாதுகாப்பு சேவை ஊழியர்கள் அசையவில்லை; ஆட்டங்காணவும் இல்லை.

ரயில்வேத் திணைக்களம் அவர்களுக்குப் பதவி விலக்கும் கடிதங்களை அனுப்பியது. அவர்கள் அஞ்சவில்லை. நீதிமன்றத்தின் கரங்களைப் பற்றினார்கள்.

தமக்கு விருப்பமில்லாத ஒரு பணியைச் செய்யுமாறு அரசாங்கம் நிர்ப்பந்திக்கிறது சேவையில் சேரும்போது இராணுவப் பயிற்சி பெறவேண்டும் என்ற நிபந்தனை எதுவும் விதிக்கப்படவில்லை. அதற்கான சம்மதத்தையும் தாம் அப்போது வழங்கவில்லை எனவே, ஏற்கனவே தாம் சம்மதம் தெரிவிக்காத — தமக்கு விருப்பமில்லாத ஒரு பயிற்சியைப் பெறுமாறு கோருவது மனித உரிமை மீறல் என்று வாதித்தார்கள். உயர்நீதி மன்றம் அவர்களது நிலை சரியானது எனக் கண்டு, பதவி விலக்கும் பணிப்புரையை ரத்துச் செய்யுமாறு உத்தரவிட்டிருக்கிறது.

இது அரசாங்கத்தின் இராணுவமய ஆசைக்கு வைக்கப்பட்ட பெரும் ஆப்பு என்றே கருதவேண்டும்.

ஏனெனில் —

ரயிலில் குண்டு வெடித்ததும், அதனைத் தடுப்பதற்கு அதாவது அவ்வாறு நடக்காமல் பாதுகாப்பதற்கு பாதுகாப்புச் சேவை ஊழியருக்கு இராணுவப்பயிற்சி அளிப்பதுதான் உரிய மார்க்கம் என்று அரசு அதிகாரிகள் திடுதிப்பென முடிவு செய்தார்கள்.

அந்த முடிவு பிழையானது என்று நீதிமன்றம் அறிவுறுத்தி இருக்கிறது. இல்லையேல் எங்கெங்கே குண்டு வெடிப்புகள், உயிரிழப்புகள் நடக்கின்றனவோ அங்கெல்லாம் பணிபுரியும் ஊழியர்களை இராணுவப் பயிற்சி பெறுமாறு நிச்சயம் அரசு கட்டாயப்படுத்தி இருக்கும்

அதன் மூலம் அரசாங்க, கூட்டுத்தாபன ஊழியர்களில் பெரும் எண்ணிக்கையானோர் ஆயுதப் பயிற்சி - இராணுவப் பயிற்சி பெற்றவர்கள் ஆகிவிடுவார்கள். சொந்த விருப்பம் இன்றியே அவர்களும் இராணுவத்தின் வாலாக நீள வேண்டி வந்திருக்கும்.

ஏற்கனவே உள்ள இராணுவத்தினரின் எண்ணிக்கை இப்போது மாதாந்தம் அதிகரிக்கப்படுகிறது அது மட்டுமா? றிசேர்வ் படையினர் எண்ணிக்கை வேறு. ஊர்காவலர் என்ற உதவாத கூட்டம் மற்றொன்று.

தமிழ்ப் பகுதிகளில் குடியேற்றப்படுவதற்கென குண்டர்களுக்கு இரகசிய ஆயுதப் பயிற்சி மற்றொருபுறம்.

இவை யாவும் போதாதென்று அரச ஊழியருக்கும் ஆயுதப் பயிற்சி வழங்கினால்...? ஸ்ரீலங்காவில் உள்ளவர்களில் ஆகக் குறைந்தது 50 சத வீதத்தினராவது இராணுவப் பயிற்சி பெற்றவர்கள் ஆகிவிடுவார்கள்!

இது இறுதியில் எதில் போய் முடியும்? எப்படிப் போய் முடியும்? தென்னிலங்கை முழுவதும் இராணுவ மயமாகும் கதையில் முடியாதா?

தமிழர்களை இன அழிப்புச் செய்யும் பெரும் திட்டத்தின் ஒர் அங்கமாக இது விளங்கி இருக்கும். அதனால் தான் அரச கூட்டுத்தபன ஊழியர்களுக்கு இராணுவப் பயிற்சி வழங்கும் பெரும் சதித் திட்டத்துக்கு உயர் நீதிமன்றம் ஆப்பு வைத்துவிட்டதாகக் கூறுகிறோம்.

ஓர் இனத்தை ஆயுத பலத்தால் அழிப்பதை உலகம் பார்த்துக் கொண்டிராது என்பது தெரிந்திருப்பினும் போர் விரும்பிகளுக்கு, ஆயுத வர்த்தகர்களுக்கு, கொலை வெறியருக்கு அது எங்கே புலப்படும்?

## விறகு விலையேற்றம்; மறுபரிசீலனை செய்க

### நல்லூர் ப. நோ. கூ. ச. கோரிக்கை

அரசாங்க மரக் கூட்டுத்தாபனம்விறகின்விலையேற்றத்தை மறுபரிசீலனை செய்யவேண்டும். மக்களின் அன்றாட பாவனைப் பொருளான விறகின்விலையேற்றம் பொதுமக்களைப்பெரிதும்பாதித்துள்ளது.

இதுபற்றிய கூட்டம் 17ஆம் திகதி திரு. பெ. கனகசபாபதி தலைமையில் நடைபெற்றது.

கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு. சி. வேலாயுதப்பிள்ளையின் இடமாற்றத்தை உடன் ரத்துச் செய்யுமாறு கூட்டுறவு ஆணையாளரைக் கேட்டுக்கொள்வது என்றும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. (உ-5)

# கூர்க்காலாந்து வழங்காவிடின் ஆயுதப் போர்

## தேசிய விடுதலைத் தலைவர் அறிவிப்பு

டார்ஜீலிங். டிச. 25

1987 பெப்ரவரிக்கு முன்னர் -இரு மாதங்களினுள்- கூர்க்கலாந்து அமைக்கப்படவேண்டும் இல்லையேல் ஆயுதப் போராட்டம் ஆரம்பமாகும்.

-- இப்படி கூர்க்கலாந்து தேசிய விடுதலை முன்னணித் தலைவர் சுபாஷ் கிஷிங் அறிவித்திருக்கிறார்.

தனது முன்னணியில் 9 தொடக்கம் 10 லட்சம் வரையான வீரர்கள் இருக்கின்றனர்.

1987 பெப்ரவரியில் மேற்கு வங்காள சட்டசபைத் தேர்தல் நடைபெறவுள்ளது

அதற்கிடையில் இந்திய மத்திய அரசு கூர்க்கலாந்தை அமைத்துத் தரவேண்டும். இல்லையேல் சட்டசபைத் தேர்தலை கூர்க்கலாந்து மக்கள் பகிஷ்கரிப்பர்.

பின்னர் டார்ஜிலிங் மலைப் பகுதியில் ஆயுதப் போராட்டம் ஆரம்பமாகும்.

-- இப்படி முன்னணித் தலைவர் சுபாஷ் கிஷிங் மேலும் சொன்னார்.

மேற்கு வங்காளத்தைப் பிரிக்க முடியாது என்று பிரதமர் காந்தி அறிவித்திருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது (உ-எ)

## பேர்னூட் திரும்பினார்

புதுடில்லி, டிச 26

இலங்கைத் தூதர் பேர்னூட் திலகரத்ன புதனன்று புதுடில்லி திரும்பினார்.

இந்திய இணை அமைச்சர்கள் நட்வர்சிங், சிதம்பரம் ஆகியோரை திரு. பேர்னூட் திலகரத்ன விரைவில் சந்திப்பார்.

தமிழர் அமைப்புக்களை இந்திய இணை அமைச்சர்கள் சந்திக்க சென்னை புறப்படும் முன்னர் இச்சந்திப்பு இடம் பெறும். (உ-எ)

## வெளி உலகில்

### பொற்கோயில் நிர்வாகத்திலிருந்து

## பர்னூலா ஆதரவாளர் இருவருக்கு கல்தா!

சண்டிகார், டிச. 25

பஞ்சாப் முதலமைச்சர் சுர்ஜித்சிங் பர்னூலாவின் ஆதரவாளர்களான இரண்டு முக்கிய சீக்கிய மதகுருமார்கள் பொற்கோயில் நிர்வாகத்தில் இருந்து தூக்கி வீசப்பட்டனர்.

இதனிடையில் பஞ்சாப் உடன்பாட்டை அடுத்த மூன்று மாத காலத்தினுள் அமுல் நடத்தப்பட வேண்டும் என்று முதலமைச்சர் பர்னூலா அரசு, மத்திய அரசுக்கு காலக்கெடு விதித்திருக்கிறார்.

பஞ்சாப் நெருக்கடி தீவிரம் அடைவதை இரண்டு நிகழ்ச்சிகளும் எடுத்துக் காட்டுவதாக புதுடில்லி அரசு வட்டாரங்கள் கூறின.

பொற்கோயிலின் நிர்வாகத்தை சீக்கியத் தீவிரவாதிகள் கைப்பற்றும் நடவடிக்கையாகவே முதலமைச்சர் பர்னூலாவின் ஆதரவாளர்களான இரண்டு மதகுருமார்கள் விலக்கப்பட்டனர். (உ-எ)

### இஸ்ரவேல் படை காவல்புரிய

## பெத்தலஹேம் நகரில் நத்தார் ஆராதனை

வத்திக்கான், டிச. 25

உலகெங்கும் நத்தார் தினம் கொண்டாடப்பட்டது

கிறிஸ்துநாதர் பிறந்த பெத்லஹேமில் ஆயிரக்கணக்கான மக்கள்குழுமி நத்தார் ஆராதனைகளில் கலந்துகொண்டனர்.

இஸ்ரவேல் பாதுகாப்புப்படையினர் காவல் பணியில் ஈடுபட்டிருந்தனர்.

இஸ்ரவேல் பிரதமர் ஷாமீரும் பெத்லஹேம் சென்றிருந்தார்.

வத்திக்கானில் பரிசுத்த பாப்பரசர் நள்ளிரவு நத்தார் ஆராதனையில் கலந்துகொண்டார். பத்தாயிரத்துக்கு அதிகமான மக்கள் ஆராதனையில் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்ச்சி நாற்பது நாடுகளுக்கு ஒளிபரப்பப்பட்டது. (உ-எ)

## றேகனின் ஞாபகசக்தி

வாஷிங்டன், டிச. 25

ஈரான் ஆயுத விற்பனை பிரச்சினை தொடர்பான விவாதத்தில் அமெரிக்க அதிபர் றொனல்ட் றேகனின் ஞாபகசக்தி முக்கிய இடம் பெற்றுவருகிறது.

75 வயதான அதிபர் றேகனின் ஞாபக சக்தி பற்றி அமெரிக்கப் பத்திரிகைகள் செய்திகளை வெளியிட்டு வருகின்றன. (உ-எ)

# அமெரிக்க எம்.பிக்கள் தென்னாபிரிக்காவுக்கு செல்லத் தடை!

ஜோஹன்னஸ்பேர்க்' டிச. 25

தென்னாபிரிக்காவுக்கு விஜயம் செய்ய அமெரிக்க காங்கிரஸ் எம்.பிக்கள் குழுவுக்கு அனுமதி அளிக்கப்படமாட்டாது

—இப்படி தென்னாபிரிக்க வெளியுறவு அமைச்சர் பிக் போத்தா அறிவித்தார்.

தென்னாபிரிக்காவின் உண்மை நிலையை அறியும் பொருட்டு ஜனநாயக குடியரசுக் கட்சிகளை சேர்ந்த 33 எம். பிக்கள் ஜனவரி முற்பகுதியில் விஜயம் ஒன்றை மேற்கொள்ள தீர்மானித்துள்ளனர்.

அமெரிக்க பொருளாதாரத்தடையினால் தென் ஆபிரிக்காவில் ஏற்பட்ட பாதிப்பை ஆராய்வதும் இவ்விஜயத்தின் நோக்கம் என்று கூறப்படுகிறது.

இக் குழுவை தலைமை வகித்து அழைத்துச் செல்ல உள்ள திரு. ஹோவர்ட் வூல்ப், கிரம்ளினில் உள்ள எதிரிகளிலும் பார்க்க தென்னாபிரிக்காவின் மிகப் பெரிய எதிரி—இப்படி வெளியுறவு அமைச்சர் வர்ணித்தார். (உ-எ)

## எம்.ஜி.ஆர் வழங்கிய அன்பளிப்புச் சங்கிலி ஜப்பான் போய்ச் சேருமா?

சென்னை, டிச. 25

தமிழக முதலமைச்சர் எம் ஜி. இராமச்சந்திரனால் அன்பளிப்புச் செய்யப்பட்ட 4½லட்சம் ரூபா பெறுமதியான தங்கச் சங்கிலியை ஜப்பான் நரம்பியல் நிபுணர் டாக்டர் டெட்ஸுா கன்னோ ஜப்பான் கொண்டு செல்ல முடியுமா?

இக்கேள்வி தமிழக அரச வட்டாரங்களில் எழுந்துள்ளது.

தமிழக முதலமைச்சருக்குச் சிகிச்சை அளித்தவர் டாக்டர் கன்னோ.

அதற்காக 1.9 கிலோ நிறையுள்ள தங்கச் சங்கிலியை முதலமைச்சர் அன்பளிப்புச் செய்திருந்தார்.

ஜப்பானிய நிபுணர் இந்த அன்பளிப்பை தாய் நாட்டுக்குக் கொண்டு போக இந்திய நாணயச் சட்டம் இடங்கொடுக்காது.

இந்திய ரிசர்வ் வங்கியின் அனுமதி, இதற்குப் பெற வேண்டும் ரிசர்வ் வங்கியின் அனுமதி 20,000 ரூபா முதல் 30,000 ரூபா மதிப்புள்ள தங்கநகைகளை வெளிநாடு கொண்டு செல்லவே உண்டு

டாக்டர் கன்னோவுக்கு இந்த அனுமதி கிடைக்கும் என்று அ.தி.மு.க நம்புகிறது. (இ-எ)

## சீக்கிய பெண் எம்.பி சுட்டுக் கொலை!

சண்டிகார் டிச, 25

தீவிரவாதியாக இருந்து மிதவாதியாக மாறிய சீக்கிய பெண் அரசியல்வாதி ஒருவர் நேற்று ஜலந்தர் நகரில் அவரின் வீட்டில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டார்.

முதலமைச்சர் பர்னூலாவின் தலைமையிலான அகாலிதள் கட்சியின் எம். பியாக இவர் இருந்து வந்தார்.

1984 பொற்கோயில் முற்றுகையின் போது இவர் தீவிரவாதத் தலைவர் பிந்தரன் வாலேயின் நெருங்கிய ஆதரவாளராக இருந்தார்.

பின்னர் மிதவாதியாக மாறி முதலமைச்சரின் அகாலிதள் கட்சியில் சேர்ந்து கொண்டார்.

திருமதி ஹௌசா இவரின் பெயர்.

சீக்கிய தீவிரவாத இயக்கத்துக்கு எதிராக செயற்படுவதை நிறுத்திக் கொள்ளும்படி இவருக்கு தொலைபேசி, கடிதப் பயமுறுத்தல்கள் விடுக்கப்பட்டு இருந்தன. (உ-எ)

### கடும் நடவடிக்கை

கூடுதல் ஜனநாயக உரிமை கோரி கிளர்ச்சி செய்யும் மாணவர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று சீன அதிகார பீடம் எச்சரித்துள்ளது.

நவசீன செய்தி ஸ்தாபனம் நேற்று இதை வெளியிட்டது (உ-எ)

# தருணம் அறிந்து இறைவன் 'கருணை' எனும் பால் தருவான்

''பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப் பரிவுடையவர் பரம்பொருள்'' என்று பக்தர்களெல்லாம் பாடித்துதிக்கின்றனர். அத்தகைய பரிவு படைத்திருப்பது உண்மையெனில், ஏன் அதை இவ்வுலகின் கண்ணுள்ள எல்லோருக்கும் ஒருமாதிரிக் காட்டலாகாது? என்கிறார் பகுத்தறிவாளர் ஒருவர்.

பரந்த மனம் படைத்த வள்ளல் ஒருவர் தம் இல்லத்தின் கண், ஏராளமாகப் பாற்குடங்கள் வைத்துக்கொண்டு—

'வந்து கேட்பார் அனைவருக்கும் வேண்டிய மட்டும் பால் கொடுக்கப்படும்' என்று விளம்பரப் பலகையும் வீட்டின்முன் தொங்க விடுகின்றார்.

**ஞானக்கதிர்**

விளம்பரத்தைக் கண்ணுற்ற ஒரு சிலர், 'இவராவது பால் தருவதாவது' என்று தம்முள் பரிகசித்துச் சென்று விடுகிறார்கள். மற்றொருசிலர் தமக்குத் தேவையில்லை என்று சென்றுவிடுகின்றனர்.

பாலைப் பெறவேண்டி உள்ளே செல்கின்றார்கள் பலர் ஆனால் அவர்களுள் ஒரு சிலர் பாத்திரமின்றி வெறுங்கையோடு சென்று பாலைப்பெற வழியின்றித் திரும்புகின்றனர். மற்றும் சிலர் கொண்டுபோன பாத்திரத்திலிருந்த இதர பானங்களைக் காலி செய்ய விருப்பமின்றிப் பால் ஏற்றுக் கொள்ளப் பாத்திரத்தில் இடமில்லாத நிலையிற் திரும்புகின்றனர்.

அவரவர் கொண்டு சென்ற பாத்திரத்தின் அளவுக்குத் தக்கபடி பால் நிறையவோ குறையவோ சகலருக்கும் கிடைத்தது.

குறையப் பெற்றவர்கள் தங்கள் பாத்திரங்கள் சிறியன என்பதைச் சிந்தியாது தமக்குக் குறைவாகக் கொடுத்து விட்டார்களே என்று வருந்திக் குறை கூறினார்கள். பாலைப் பெற்று வந்தவர்களுள்ளும் சிலர் தம்முடைய பாத்திரங்களில் துவாரங்கள் இருந்தபடியால் அதன்மூலம் கிடைத்த பால் வெளியே சிந்தப் பாலை இழந்தனர். துவாரமில்லாத பாத்திரங்களிற் பாலை வேண்டி வந்தவர்களுள்ளும் ஒரு சிலரது பால் பாத்திரத்தில் இருந்த களிம்பின் காரணத்தாற் பழுதடைந்து விட்டது

மிகக் குறைந்த சிலரே பாலை நன்முறையிற் பெற்றுப் பயன் பெற்றனர். மற்றவர்கள் அனைவருமே ஏதோ ஒருவிதத்திற் பாலைப்பெற முடியாது போயினும் குற்றம் தம்பாலுள்ளதென்பதை அறியாது வழங்கினோரைக் குறை கூறினார்கள்.

இவ்வுதாரணத்தை நன்கு மனத்தில் நிறுத்திக் கொண்டு, அளப்பரும் கருணை எனும் பாலை அள்ளிச் சொரியும் ஆண்டவனிடம் இருந்து, அதனைப் பெற நம்மிடமுள்ள தகுதியைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். சட்டதிட்டமின்றி எல்லோருக்கும் தம் கருணையை வழங்க இறைவன் காத்துக் கொண்டிருக்கிறார் ஆனால் அதனை ஏற்றுக் கொள்ளவே விருப்பமில்லாதவர்களை என்ன செய்வது!




அருட் கருணையில் விருப்பமுற்றவர்களிலும் சிலர் தமது உள்ளமெனும் பாத்திரத்தை இழந்த வன்நெஞ்சர்களாகவும், மற்றும் சிலரோ உலக எண்ணங்களாலேயே உள்ளத்தை நிறைத்து இறைவன் கருணை உட்புகவே இடமின்றியும், வேறுசிலர் காம, குரோத, லோப, மோக, மத, மாச்சரியக் களிம்புகள் ஏறியதாய் உட்புகுந்த கருணையையும் உபயோகிக்கவொட்டாது செய்துவிடுகின்றனர்.

ஆனால் தன்னலமற்ற தியாகிகளாம் உண்மைப் பக்தர்களது உள்ளங்களோ, ஆசைத் துவாரமின்றி, அழுக்குக் கழிப்பின்றி, சுயநலச் சுருக்கமின்றிப் பரந்து விரிந்து பரம் பொருளின் பெருங் கருணையை முழுக்க முழுக்க ஏற்று அவ்வின்ப வாழ்வில் திளைக்கின்றன.

''வெள்ளத் தனைய மலர் நீட்டம் மாந்தர் தம் உள்ளத்தனையது உயர்வு'', என்று அழகாக வள்ளுவரும் கூறியுள்ளார்.

உள்ளம் முழுவதும் இறைவனுக்கே தந்து அவனையே தொடர்ந்து சிக்கெனப்பிடித்து அவனருள் பெற்று உய்வோமாக!

சுவாமி சச்சிதானந்த யோகிராஜ்
அருளுரை
தொகுப்பு: உடுவில் திலகம்



**பொய்யாமொழி**

குறள்:

அடல் வேண்டும் ஐந்தன் புலத்தை விடல் வேண்டும்
வேண்டிய எல்லாம் ஒருங்கு.

பொருள்:

ஐம்பொறிகளுக்கு உரிய ஐந்து புலன்களின் ஆசையையும் வெல்லுதல் வேண்டும்; அவற்றிற்கு வேண்டிய பொருள்களை எல்லாம் ஒருசேர விடல் வேண்டும்.

# மலேரியா பரவும் அபாயம்

யாழ்ப்பாணம், டிச. 26

வடபகுதி மக்களின் கவனக் குறைவால் மலேரியா நோய் பரவுவதோடு, மீண்டும் இந்நோய் மறுதலிக்கும் அபாயமும் ஏற்பட்டுள்ளது.

-- இவ்வாறு பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் திரு. என். கனகசபை எச்சரித்துள்ளார்.

மலேரியா நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் கட்டாயம் ஐந்து நாள் சிகிச்சை எடுக்க வேண்டும். பலர் இரண்டு நாட்களில் காய்ச்சல் விட்டதும் சிகிச்சை எடுப்பதை நிறுத்திக் கொள்கின்றனர்.

இதனால் அவர்களுக்கு இந்நோய் மீண்டும் மறுதலித்து வரக்கூடிய ஆபத்து உண்டு.

கிளிநொச்சி மாவட்டத்திலும், வரணி, கைதடி, மட்டுவில், அல்லைப்பிட்டி, புங்குடுதீவு, மண்கும்பான், அரியாலைப் பகுதிகளில் இந்நோய் பரவும் ஆபத்து ஏற்பட்டிருக்கிறது.

இப்பகுதிகளில் மலேரியா நோயாளரும், இந்நோயைப் பரப்பும் அனோபிலிஸ், குயிலிசியேசிஸ் நுளம்புகளும் அதிகமாக காணப்படுவதே இதற்குக்காரணம்.

இப்பகுதி பொதுமக்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸில் சேருமாறு மஜீத்துக்கு அழைப்பு

அம்பாறை, டிச. 26

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியில் சேர்ந்து முஸ்லிம் மக்களின் விடுதலைக்காக உழைக்க முன்வருமாறு பிரதி அமைச்சரும் சம்மாந்துறை எம். பியுமான ஜனாப் அப்துல் மஜீதுவுக்குப் பகிரங்க அழைப்பு விடுக்கப்பட்டது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் முதலாவது பொதுக்கூட்டத்தில் வைத்து கட்சி கொள்கைப் பரப்புச் செயலாளர் கவிஞர் மருதூர்க்கனி இந்த அழைப்பை விடுத்தார்.

சம்மாந்துறையில் ஹாஜியார் ஒழுங்கையில் இப்பொதுக் கூட்டம் புதன்கிழமை நடைபெற்றது.

கூட்டம் நடந்த இடத்தில் இருந்து சுமார் 100 யார் தொலைவில் தான் பிரதி அமைச்சர் அப்துல் மஜீதின் வீடு இருக்கிறது.

பகிரங்க அழைப்பு விடுக்கப்பட்ட போது ஜனாப் மஜீத் வீட்டில் இருந்தார்.

இந்த அழைப்புப் பற்றி 'உதயன்' செய்தியாளர் ஜனாப் மஜீதிடம் அபிப்பிராயம் கேட்டார்.

ஜனாப் மஜீது பதில் ஏதும் தெரிவிக்கவில்லை; புன்சிரிப்பை உதிர்த்தார்.

'26 வருடங்களாக எம். பியாகச் சேவை புரிந்து வரும் பிரதி அமைச்சர் ஜனாப் மஜீது முஸ்லிம் காங்கிரஸ் கட்சியில் சேர்த்து முஸ்லிம் இனத்தின் சுதந்திரத்துக்காக உழைக்க முன்வரவேண்டும் என்று இரு கரம் கூப்பி அழைத்திருக்கின்றோம்'— இப்படி கவிஞர் மருதூர்க்கனி அழைப்பு விடுத்தார் (இ-எ-14)

## பொதுக்கூட்டம்

பருத்தித்துறை, டிச. 26

பருத்தித்துறை வர்த்தக சங்க முதலாவது ஆண்டு நிறைவு விழாவும் பொதுக் கூட்டமும் இன்று வெள்ளிக்கிழமை வேலாயுதம் மகா வித்தியாலய கலாசார மண்டபத்தில் திரு வி. இராஜலிங்கம் தலைமையில் நடைபெறும் என செயலாளர் திரு. ந. சிவசுப்பிரமணியம் தெரிவித்தார். (உ-118)

## கஜூ வளர்க்க நிதி ஒதுக்கீடு

யாழ்ப்பாணம், டிச 26

மணல்காடுப் பகுதியில் கஜூ வளர்ப்பதற்கென வனத் திணைக்களத்திற்கு ஒரு லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

யாழ் மாவட்ட அபிவிருத்திச்சபையின் நிதி ஒதுக்கீட்டிலிருந்து இந்நிதியை அரச அதிபர் ஒதுக்கியுள்ளார். (உ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறந்த முறையில் வீடியோ படம் எடுப்பதற்கு
வீடியோ விஹொன்ஸ
ஒளிப்பதிவாளர்
சி. இராஜராஜனின்
கலை நுணுக்க ஒளிப்பதிவில்
உங்கள் இல்லங்களில் நடைபெறும் மங்கல நிகழ்ச்சிகளை ஒளிப்பதிவு செய்துகொள்ளுங்கள்
இல- 353 C, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.
(வெலிங்டன் சந்திக்கு அருகாமை)

# உதயன்

26 - 12 - 1986 வெள்ளிக்கிழமை

For quality Video Filming
VIDEO VIHONS
RAJARAJHAN'S
Effects and Techniques in videography gives great pleasure for all your memorable events at home or else.
No. 353 C, Clock Tower Road, JAFFNA.
(Near Wellington Junction)

## முஸ்லிம் காங்கிரஸ் பின்னணியில் நீலனா?

### தலைவர் மறுத்துரைக்கிறார்

அம்பாறை, டிச. 26
ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்கு பின்னால் இருந்து இயங்குபவர் கூட்டணிப்பிரமுகர் டாக்டர் நீலன் திருச்செல்வம் அல்லர்; முஸ்லிம் மக்கள்தான் இயங்குகின்றனர்.

— இப்படிச்சொன்னார் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சித் தலைவர் ஜனாப் எம். எச். எம். அஷ்ரப்.

சாய்ந்தமருதுவில் நேற்று நடந்த கூட்டத்தில் பேசுகையில் ஜனாப் அஷ்ரப் சொன்னதாவது:

எமது கட்சியைப்பற்றி பலர் பலவிதமாகப் பேசுகின்றனர்.

ஈராக்குக்கு ஆதரவா? ஈரானுக்கு ஆதரவா? என்று சிலர் கேட்கின்றனர்.

ஒரு முஸ்லிம் எம் பி. என்னைச் சந்தித்து ''டாக்டர் நீலன் திருச்செல்வம்தான் உங்கள் கட்சிக்குப் பின்னால் இருந்து இயங்குகின்றார்'' – என்று சொன்னார்.

முஸ்லிம் மக்கள்தான் என் கட்சியை இயக்குகிறார்கள். வேறுயாரும் அல்லர் –– இப்படி ஜனாப் அஷ்ரப் சொன்னார். (உ–எ–14)

## ராஜீவை தேரர்கள் சந்திக்க மாட்டார்கள்

கொழும்பு, டிச. 26
இனப்பிரச்சினை சம்பந்தமாக பிரதமர் ராஜீவ் காந்தியை நாம் சந்திக்கப்போவதுஇல்லை என்று மல்வத்தை. அஸ்கிரிய, அமரபுர மகாநாயக்க தேரர்கள் அறிவித்து இருக்கின்றனர்.

மூன்று பீடாதிபதிகளும் பிரதமர் ராஜீவைச் சந்திக்கக்கூடும் என முன்னர் செய்திகள் வெளியாகியிருந்தது தெரிந்ததே.

இனப்பிரச்சினைத் தீர்வுக்கு இந்தியாவுடன் பேச்சுக்கள் நடத்துவது கூடாது என்று ஆரம்பத்தில் இருந்தே கூறி வந்து உள்ளோம்

இப்படி மூன்று மகாநாயக்க தேரர்களும் பத்திரிகை ஒன்றுக்கு தெரிவித்தனர். (உ-எ)

## சுன்னாகத்தில் கூட்டுறவாளர் விழா

### பணியாளர் பாராட்டப்படுவர்

சுன்னாகம், டிச. 26
இலங்கையில் கூட்டுறவு இயக்கத்தின் எழுபத்தைந்து ஆண்டுபூர்த்தியையொட்டி சுன்னாகம் பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் கூட்டுறவாளர் விழாவினை நாளை சனிக்கிழமை கொண்டாடுகிறது.

சுன்னாகம் இராமநாதன் கல்லூரியில் பி. ப. 3 00 மணிக்கு ஆரம்பமாகும் இந்தவிழாவுக்கு சங்கத் தலைவர் திரு. சிகுமரவேல் தலைமை வகிக்கிறார். சிரேஷ்ட கூட்டுறவு ஆக்க உதவி ஆணையாளர் திரு. ச. ஞானப்பிரகாசம், கூட்டுறவு ஆணையாளர் திரு க. சண்முகலிங்கம், வடமாநில கல்விப்பணிப்பாளர் திரு இரா.சுந்தரலிங்கம் ஆகியோர் பிரதம விருந்தினர்களாக கலந்து கொள்வர்.

இந்த விழாவையொட்டி நடத்தப்பட்ட பேச்சு, கட்டுரை, கவிதைப் போட்டிகளிலும் கரபந்தாட்டம், வலைப்பந்தாட்டம், உதைபந்தாட்ட சுற்றுப் போட்டிகளிலும் வெற்றிபெற்றோருக்கு பரிசுகள் விழாவில் வழங்கப்படவுள்ளன.

கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு. இ ஜெகநாதன், மாவட்ட அபிவிருத்திச்சபை உதவிச் செயலாளர், தி. பொ. பாலசிங்கம் உதவி அரச அதிபர் ஆ மகாலிங்கம், யாழ். தேசிய கூட்டுறவு சபை தலைவர் திரு சி சிவமகாராசா, சுன்னாகம் மக்கள் வங்கி முகாமையாளர் திரு. வை. சுந்தரலிங்கம், யாழ் தேசிய கூட்டுறவுச் சபை செயலாளர் திரு க. கணேசலிங்கம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக விழாவில் கலந்து சிறப்பிப்பார்கள்.

கூட்டுறவுக் கொடியை திரு. ம சிவராஜா ஏற்றி வைப்பார்,

பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் உயர்ச்சிக்காக 25 வருடங்களாகத் தொடர்ந்து நற்பணி புரிந்த பணியாளர்கள் பன்னிருவருக்கு தங்கப் பதக்கங்கள் வழங்கப் படும். (உ– 27)

## மலேரியா...

(3ஆம்பக்கத்தொடர்ச்சி)
கள் தமது சுற்றுடலில் நுளம்புகள் வளர்வதை தடுப்பதற்கான முன் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றும் பணிப்பாளர் தெரிவித்தார். (எ–உ–5)

ஸ்கந்தா
ஆண்டு 6 (தரம் 5) அனுமதிப் பரீட்சை 1987
28-12-86 ஞாயிறு மு.ப. 9-00 மணி
பாடங்கள்: கணிதம், தமிழ்
அதிபர்.

# தமிழர்களை எதிர்க்க முஸ்லிம்களை இஸ்ரவேல் சக்தி பாவிக்கிறது

## முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் கூறுகிறார்

அம்பாறை, டிச 26
இஸ்ரவேல் சக்திகள் நாட்டுக்குள் புகுந்தபின்னர்தான் முஸ்லிம்களின் உயிர்,உடைமைகளுக்குச் சேதம் ஏற்பட ஆரம்பித்தது. தமிழரை எதிர்க்க முஸ்லிம்களைப் பயன்படுத்துவதே இந்தச்சக்திகளின் நோக்கம்.

இப்படித்தெரிவித்தார் ஸ்ரீ லங்கா முஸ்லிம்காங்கிரஸ் கட்சியின் தலைவர் ஜனாப் எம் எச். எம் அஷ்ரப்.

கட்சியின் பிரசாரக் கூட்டம் நேற்றுக் காலை சாய்ந்த மருது இரண்டாம் குறிச்சியில் நடந்தது

கொழும்பு சட்டக்கல்லூரி இறுதிஆண்டுமாணவன் ஜனாப். எஸ். நிசாமுதீன் தலைமை வகித்தார்.

ஸ்ரீ லங்கா காங்கிரஸ் கட்சித் தலைவர் ஜனாப் எம். எச் எம். அஷ்ரப் பேசுகையில் சொன்னதாவது:

அம்பாறைத் தொகுதியுடன் சேர்ந்த கிழக்கு மாகாண சபைதான் வேண்டும் என்று அம்பாறை மாவட்டத்தின் ஐந்து எம்.பி.களும் கடிதம் எழுதி அரசுக்கு கையளித்துள்ளதாக பத்திரிகை செய்தி ஒன்று கூறுகின்றது,

கிழக்கு மாகாணத்தில் உள்ள முஸ்லிம் எம்.பி.க்கள்தான் அம்பாறைத் தொகுதியைத் தவிர்ந்த தனி முஸ்லிம் மாகாண சபை வேண்டும் என்று அரசாங்கத்தைச் சில வாரங்களுக்கு முன்னர் கேட்டிருந்தனர்,

அரச நிர்ப்பந்தம் காரணமாகத்தான் முஸ்லிம் எம்.பி.க்கள் இப்படித் திடீர் திடீர் என்று மாறுகின்றனரா?

சொந்த இனத்தின் நலனுக்காக பணியாற்ற முடியாத நிலையில் அவர்கள் உள்ளனர்.

தாங்கள் சார்ந்துள்ள அரசியல் கட்சித் தலைமைப் பீடத்தின் அபிலாஷைகளை முஸ்லிம் எம். பி க்கள், முஸ்லிம் இனத்தின்மீது திணிக்க முடியாது.

முஸ்லிம் மக்களின் அனுமதியைப் பெற்ற பின்னரா முஸ்லிம் எம் பி க்கள் அம்பாறைத் தொகுதியுடன் சேர்ந்த கிழக்கு மாகாணசபை வேண்டும் என்ற கடிதத்தை எழுதிக்கொடுத்தனர்?

முஸ்லிம் காங்கிரஸ் அரசியல் கட்சியாக பிரகடனப்படுத்தப் பட்டது. முஸ்லிம் எம் பி க்களுக்கு 'தலையிடி'யாகத் தற்போது இருக்கிறது விரைவில் அது அவர்களுக்கு 'இருதய நோயாக'வும் மாறலாம்.

கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்களுக்கு தனிக் கட்சி தொடங்கியதனால், வெளி மாகாணங்களில் வாழும் முஸ்லிம்கள் தாக்குதலுக்கு ஆளாவார்கள் என்று சிலர் பிரசாரஞ் செய்கின்றனர், இது தவறு

1915இல் இருந்து சிங்களவர்களின் இலக்கு முஸ்லிம் இனம்தான்

முஸ்லிம்கள் மிதவாதிகள்தான் வேளைவரும் போது அவன் தீவிரவாதியாகவும் மாறுவான். எமது மார்க்கமும் அதையே கூறுகிறது.

தீவிரவாதி என்றால் துப்பாக்கி ஏந்தி செயல்படுவது அல்ல கொள்கையில் தீவிரமாகஇருந்து செயல்படுபவனும் தீவிரவாதிதான்.

ஐக்கிய தேசியக் கட்சி என்றால் என்ன, சுதந்திரக் கட்சி என்றால் என்ன, சிங்கள இனம் என்ற அடிப்படையில் தான் எல்லாம் நடக்கின்றது.

ஆனால் முஸ்லிம்கள் மட்டும் தேசியக் கட்சி என்ற பெயரில் பிளவுபட்டுள்ளனர்.

—இப்படி ஜனாப் அஷ்ரப் பேசினார். மௌலவி ஏ. எச். அபு உபைதா ஏ. எல். ஏ மஜீத் ஆகியோருட்பட பலர் பேசினர். (உ–எ–14)

## பலத்த சத்தத்துடன் மின்மாற்றி வெடித்தது

பருத்தித்துறை, டிச 26
பருத்தித்துறை கூவில் வீதியில் உள்ள மின் மாற்றி செவ்வாய்க்கிழமையன்று பலத்த சத்தத்துடன் வெடித்தது

இச்சத்தம் பருத்தித்துறைப் பகுதியையே கலக்கிவிட்டது

இச்சத்தத்தை கேட்ட இராணுவத்தினர் முகாமிலிருந்து ஒரு சில நிமிடங்களுக்கு துப்பாக்கி வேட்டுக்களை நாலா பக்கமும் தீர்த்தார்கள்

இம்மின் மாற்றி முன்பு ஒருதடவை வெடித்த போது இலங்கை மின்சாரசபை திருத்தியமைத்தது. ஆனால் தற்போது இதனைத் திருத்த முடியாது என இலங்கை மின்சார சபை ஊழியர்கள் கைவிரித்துள்ளனர்.

இதனால் சுமார் 500 மின் பாவனையாளர்கள் கஷ்டமுறுகின்றனர்.

இதனைத் தொடர்ந்து மின்சாரசபை ஊழியர்கள் கிராமத்தினுள் சென்று பெருந்தொகையான சட்டவிரோத மின் பாவனையாளர்களின் வயர்களைப் பறிமுதல் செய்து எச்சரித்துச்சென்றுள்ளனர். (உ–118)

## ரோஹண விஜேவீர சரணடைந்தால் மன்னிப்பு

### கொழும்பு மாவட்ட அமைச்சர் கூறுகிறார்

கொழும்பு,டிச·26
ரோஹண விஜேவீர சரண் அடைந்தால் அவருக்கு மன்னிப்பு வழங்கப்படும்; அவரின் கட்சியான ஜே. வி. பி மீது விதிக்கப்பட்டுள்ள தடையும் நீக்கப்படும்.

கொழும்பு மாவட்ட அமைச்சரும் கொலன்னாவ எம்பியுமான வீரசிங்க மல்லிமாரச்சி முன்கண்ட தாவலை கூட்டம் ஒன்றில் பேசுகையில் தெரிவித்தார்.

168 எம் பிக்களினால் மட்டும் நாட்டைப் பாதுகாக்க முடியாது.அதற்காகவே பிரதேச சபைகள் நிறுவப்பட உள்ளன பிரதேச சபைகளுக்கான தேர்தல்கள் விரைவில் நடத்தப்படும் இளைஞர்கள் இச்சபையின் நிர்வாகத்தைக் கைப்பற்ற வேண்டும். அப்போது தான் நாடு காப்பாற்றப்படும்

ரோஹன விஜேவீரா போன்ற இளம் தலைவர்கள் பிரதேச சபைத் தேர்தலில் போட்டியிட வேண்டும்

இத்தேர்தல்களில் கலந்து கொள்ள ரோஹண விஜேவீராவுக்குச் சந்தர்ப்பம் அளிக்கப்படும். இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்த அவர் முன்வரவேண்டும்.

ரோஹணவிஜேவீராவ சரணடைந்தால் அவருக்கு மன்னிப்பு வழங்கப்படும். அவரின் கட்சி மீதான தடையும் நீக்கப்படும். அவரும் அவரின் கட்சியினரும் பிரதேச சபைத் தேர்தல்களில் போட்டியிட அனுமதிக்கப்படுவர்—

—இப்படி திரு. மல்லிமாரச்சி சொன்னார். (உ–ஐ–எ)

## இடைக்காலத் தீர்வுக்கு கம்யூனிஸ்ட் கட்சி 10 அம்ச யோசனை

யாழ்ப்பாணம், டிச 26
இனப்பிரச்சினைக்கு இடைக்கால அரசியல் தீர்வு காண்பதற்கு 10 அம்ச குறைந்தபட்ச யோசனையை இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் (இடது) மத்திய கமிட்டி வெளியிட்டுள்ளது.

இதுசம்பந்தமான அரசியல் அறிக்கையை கட்சிப் பொதுச் செயலாளர் கே. ஏ. சுப்பிரமணியம் வெளியிட்டிருக்கிறார்.

விரும்பியபோது ஒன்றோடு ஒன்று இணையவும் அவசியமான போது பிரிந்து தனித் தனியாக இயங்கவும் பூரண சுதந்திரம் கொண்ட அமைப்புக்களாக வடக்கு, கிழக்கு மாகாணங்கள் பிரதேசசுயாட்சி அமைப்புக்களாக்கப்பட வேண்டும்.

அதே நேரத்தில் பயங்கரவாதத் தடைச் சட்டம், அவசரகாலச் சட்டம் ஆகியன ரத்துச் செய்யப்பட்டு, அதன்கீழ் கைதானவர்கள் நிபந்தனையின்றி விடுவிக்கப்பட வேண்டும்.

அரசியல் அமைப்பின் 6 ஆவது திருத்தச்சட்டம் விலக்கிக் கொள்ளப்பட வேண்டும்.

ஆயுதப்படை முகாம்கள் மக்கள் செறிவாக வாழும் பகுதிகளில் இருந்து அகற்றப்பட வேண்டும்

ஊர்காவல்படை கலைக்கப்படவேண்டும்.

அத்துமீறிய செயலில் ஈடுபட்ட ஆயுதப்படையினர், ஊர்காவல் படையினர்மீது விசாரணை நடத்தப்படவேண்டும்.

இப்படி அரசியல் அறிக்கையில் கூறப்பட்டு உள்ளது (இ–எ)

## இந்தியா-

(1-ம் பக்கத்தொடர்ச்சி)
என்று அமைச்சர் லலித் அத்துலத்முதலி குறிப்பிட்டார்.

இதேவேளை தமிழ்த் தீவிரவாதிகளுடன் பேச்சுக்கள் நடத்துவது தவிர்க்கமுடியாதது, என அமைச்சர் லலித் அத்துலத் முதலி ஆகாசவாணிக்கு அளித்த பிரத்தியேகப் பேட்டி ஒன்றில் தெரிவித்தார்.

பேச்சுக்களை நடத்தும் இலக்கை எப்படி அடைவது என்பது முக்கியம் அல்ல.

நத்தார் அன்று அசம்பாவிதங்கள் இல்லாமல் யுத்த நிறுத்தம் இருதரப்பினராலும் அனுஷ்டிக்கப்பட்டிருப்பது இது விடயத்தில் ஒரு படி முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதைக் காட்டுகிறது. இப்படி அமைச்சர் அத்துலத் முதலி சொன்னார்.

தற்போதைய நிலையில் தீவிரவாதிகளுடன் நேரடியாகவோ, மறைமுகமாகவோ பேச்சுக்களை நடத்துவது பற்றிக் கூறுவது கஷ்டமானகாரியம் என்றும் அத்துலத் முதலி [illegible] பேட்டியில் கூறியிருக்கிறார் (உ-எ)

## ஒலி, ஒளி சேவையாளர் கூட்டம்

யாழ்ப்பாணம்,டிச 26
தனியார் தொலைக்காட்சி சேவை, மினி சினிமா, வீடியோ சென்ரர், ஒலிபெருக்கி- தனியார் விளம்பரசேவை ஆகிய சகல ஒலி ஒளி சேவையாளருக்குமான பொதுக் கூட்டம் ஒன்று நாளை சனிக்கிழமை காலை 10மணிக்கு வின்சர் திரையரங்கில் நடைபெறவுள்ளது.

சம்பந்தப்பட்டவர்கள் அனைவரையும் இக்கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (உ)

## நம்பிக்கை இல்லாத் தீர்மானம்

கொழும்பு, டிச. 26
அஸ்கிரிய பீடாதிபதி வண பலிபான சந்தானந்தா மகாநாயக்க தேரரை அவமதிக்கக் கூடியதாக பேசிய பிரதி உயர்கல்வி அமைச்சர் ஏ. ஆர். எம் பி. அத்தநாயக்கா மீது நாடாளுமன்றத்தில் நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்று கொண்டுவரப் படவுள்ளது,

சுதந்திரக்கட்சி எம். பி. க்கள் கம்பஹா எம். பி. திரு எஸ். டி பண்டாரநாயக்கா தலைமையில் பிரேரணைக்கான முன்னறிவித்தலைக் கொடுத்து உள்ளனர். (உ–எ)

## செயற்குழு கூட்டம்

அம்பாறை, டிச. 26
ஸ்ரீலங்காமுஸ்லிம்காங்கிரஸ் கட்சியின் மத்திய செயற்குழுவின் இரண்டாவது கூட்டம் நாளை சனிக்கிழமை மருதமுனையில் நடைபெறும்

இப்படி கட்சியின் இணைச் செயலாளர் ஜனாப் நிசாம் காரியப்பர் தெரிவித்தார். (உ–எ–14)

## புலிகளைச் சந்திக்க...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
திரு. ஷெல்டன் ரணராஜா யாழ்.செல்லவிருப்பம் தெரிவித்திருந்தார். உயர்பீடம் அதைவிரும்பவில்லை.

அதே நேரம் கலாநிதி ஆ சந்தையாவும் விருப்பம் தெரிவித்திருக்கிறார்.

தேசிய பாதுகாப்பு அமைச்சர் அத்துலத் முதலியும் யாழ் செல்லும் குழுவில் இடம் பெறவும் தனது விருப்பத்தை உயர் பீடத்திடம் வெளியிட்டிருப்பதாகமிகநம்பிக்கையாகத் தெரிய வருகிறது.

யாழ். விஜயம்தொடர்பாக ஜனாதிபதியை அமைச்சர் அத்துலத், திருவாளர்கள் வின்சன்ட் பெரேரா, ஜெயபாலசிங்கம் ஆகிய மூவரும் இன்று வெள்ளிக்கிழமை சந்திக்கின்றனர்.

யாழ்ப்பாணத்தில் எங்கு வைத்து பேச்சுக்கள் நடத்துவது என்ற பிரச்சினையும் இன்னும் தீர்க்கப்படவில்லை.

யார் தூதுக் குழுவில் இடம் பெறுவது, எங்கு வைத்து பேச்சுக்கள் நடத்துவது ஆகிய பிரச்சினைகளுக்கு தீர்வுகண்டால், பெரும்பாலும் யாழ் நல்லெண்ண விஜயம் சனி அல்லது திங்கள் இடம்பெறலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (அ–எ)

## வீரமரணம்

யாழ்ப்பாணம், டிச. 26
மட்டக்களப்பு ஆரையம்பதியில் கடந்த புதனன்று படையினருடன் நடந்த நேரடி மோதலில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த சுது (அரியாலையைச் சேர்ந்தவர்) என்ற போராளி வீரமரணமடைந்தார்.

அவருக்கு விடுதலைப் [illegible] செலுத்தியிருக்கின்றனர். (உ)

## விடுதலை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
தலைப் புலிகளுக்கு மேஜர் அருணாவினால் இனி எந்த விதபிரயோசனமும் இல்லை. மேஜர் அருணா தான் வெலிக்கடையில் வைக்கப்பட்டவர் என்பதும் தெரிந்த விஷயம்'' - இப்படிகொழும்பு அரசு வட்டாரம் தெரிவித்தது

இவ்வாறு 'இந்து' செய்தி வெளியிட்டது- (உ–எ)

## பிரதி அமைச்சருக்கு அநீதி இழைக்கப்படுகிறதாம்

அம்பாறை, டிச 26
நான் அனுப்பும் கடிதங்களைக் காணவில்லை என்கிறார்கள். மற்ற எம்பிக்களின் கடிதங்களுக்கு காணி கொடுக்கிறார்கள். இந்த அநீதியை என்னால் பொறுத்துக் கொள்ள முடியாது

—இப்படிச் சொன்னார் பிரதி அமைச்சரும் சம்மாந்துறை எம்.பியுமான ஜனாப் அப்துல் மஜீத்

சம்மாந்துறைத் தொகுதியில் பறிப்பதஞ் சேனை என்னும் முஸ்லிம் கிராமத்தில் முஸ்லிம் மக்கள் அளித்த வரவேற்புக்கு பதில் அளித்துப் பேசுகையில் ஜனாப் மஜீத் முன்கண்டவாறு தெரிவித்தார்.

ஜனாப் ஆதம்பாவா கூட்டத்துக்குத் தலைமை வகித்தார்.

ஜனாப் மஜீத் மேலும் பேசுகையில்;—

இந்த ஆட்சியை உருவாக்கியவர்களில் நானும் ஒருவன். சிரேஷ்ட எம்பியான எனது சிபாரிசுகளுக்கு அதிகாரத்தில் உள்ளவர்கள் மதிப்பளிப்பதாக இல்லை— என்றார். (உ–எ-14)

## நூல்வெளியீடு

யாழ்ப்பாணம், டிச. 26
கத்தோலிக்க கலை இலக்கிய வட்டத்தினரும் ''நான்'' உளவியல் மஞ்சரியினரும் இணைந்து நடத்தும் ஒளிவிழா-நூல் வெளியீட்டு விழா நாளை சனிக்கிழமைமாலை 3-30 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறும்.

விழாவுக்கு திரு. துரை ஆரோக்கியதாசன் தலைமை வகிப்பார்.

விழாவின் இறுதியில் செம்பியன் செல்வனின் ''குறுங்கதை நூறு'', ஜோசப் பாலாவின் 'உணராத உண்மைகள்'', வி. பி. யின் ''விடுதலை இறையியல்'' ஆகிய நூல்கள் வெளியிட்டு வைக்கப்படும். (உ)

## பிரசாரம் ஆரம்பம்

அம்பாறை, டிச. 26
ஸ்ரீலங்கா முஸ்லிம்காங்கிரஸ் கட்சி தனது பிரசாரக்கூட்டத்தொடரை கிழக்கு மாகாணத்தில் கடந்த புதன் கிழமை ஆரம்பித்துள்ளது

நேற்று (வியாழன்) கல்முனை, நிந்தாவூர் ஆகிய இடங்களில் பிரசாரக் கூட்டங்கள் நடைபெற இருந்தன.

27ஆம் திகதி மருதமுனையில் பெரிய அளவிலான பொதுக்கூட்டம் ஒன்றை நடத்த கட்சி ஒழுங்கு செய்துள்ளது. (இ-எ–14)

## அதிகாரி விடுதலை

பேய்ரூட். டிச. 25
பத்துமாதகாலம் பணயக்கைதியாக வைக்கப்பட்டிருந்த பிரெஞ்சு டெலிவிஷன் அதிகாரி ஒருவரை, முஸ்லிம் கெரில்லாக்குழு ஒன்று இன்று விடுவித்தது.

ஈரானுடன் இராஜதந்திர உறவை வளர்த்துக் கொள்ள பிரஞ்சு அரசு உறுதியளித்துள்ளதைத் தொடர்ந்தே பிரஞ்சுப் பிரசை விடுவிக்கப்பட்டதாக அந்த கெரில்லாக் குழு அறிவித்தது. (உ-எ)

## உருவச்சிலை தயாராகிறது

யாழ்ப்பாணம், டிச. 26
மறைந்த பிரபல தவில் மேதை தட்சணாமூர்த்தியின் உருவச்சிலை அமைக்கும் வேலைகள் முடியும் கட்டத்தில் உள்ளன.

சிற்பக்கலாநிதி செ. சிவப்பிரகாசத்தின் கைவண்ணத்தில் உருவாகும் இச்சிலையை இணுவில் இசையாளர்கள், மஞ்சத்தடி கந்தசுவாமி கோவிலில் நிறுவ உள்ளனர். (உ-5)

## வெளியீட்டாளர் கூட்டம்

யாழ்ப்பாணம், டிச. 26
தமிழ்ப் பிரதேசத்திலுள்ள சகல அச்சகத்தினர், பிரசுரகர்த்தாக்கள்,வெளியீட்டாளர்கள் ஆகியோருக்கானஆலோசனைக் கூட்டம் ஒன்று நாளை சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ் வின்சர் திரையரங்கில் நடைபெறவுள்ளது.

சம்பந்தப்பட்டவர்கள் அனைவரையும் இக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது (உ)

## சென்னையில் பணிபுரிவார்

கொழும்பு, டிச. 26
திரு. திஸ்ஸ ஜெயக்கொடி தொடர்ந்து சென்னை இலங்கைத்தூதரகத்தில் உதவித் தூதராகக் கடமையாற்ற அனுமதிக்கப்பட்டிருக்கிறார்,

திரு. ஜெயக்கொடி இடமாற்றம்பெற்று கொழும்புக்கு அண்மையில் வந்திருந்தார்,

அவரின் சேவை சென்னையில் உள்ளஇலங்கைத் தூதரகத்துக்கு தற்போதைய சூழ்நிலையில் அவசியம் தேவையாக இருப்பதாகக் கூறி, இலங்கை வெளிநாட்டமைச்சு தொடர்ந்து சென்னையில் பணியாற்றும்படி அவரைப் பணித்துள்ளது. (உ-ஐ-எ)

## இலங்கை பின்..

(1-ம் பக்கத்தொடர்ச்சி)
களையும் ஜனாதிபதி,இலங்கைத் தூதர் மூலம் புதுடில்லிக்கு அனுப்பியிருக்கின்றார்.

அண்மையில் இந்திய இணை அமைச்சர்களுடன் நடந்த கொழும்புப்பேச்சுக்களில் அம்பாறைத் தேர்தல் தொகுதியை விலக்கி கிழக்குமாகாண சபை ஒன்றை அமைப்பது குறித்து இலங்கை அரசு சம்மதம் தெரிவித்து இருந்தது.

ஜனாதிபதி தனது தூதர் மூலம் அனுப்பிய விசேட செய்தியின்படி இலங்கை கொழும்பில் ஒப்புக்கொண்ட நிலைப்பாட்டில் இருந்து பின்வாங்கி விட்டது.

ஜனாதிபதியின் விசேட செய்தியை இலங்கைத் தூதர் பெர்னாட் திலகரத்தின இந்திய அதிகாரிகளிடம் கையளித்துப் பேச்சுக்களை நடத்தவிருந்தார். (உ–எ)

## முடிவு கிட்டு..

(1-ம் பக்கத்தொடர்ச்சி)
கொழும்பு சென்று நடவடிக்கை எடுக்க உள்ளனர்.

நகைகள் உடனடியாக விநியோகம் செய்யப்படத் தொடங்கும் பட்சத்தில் மாத்திரம் மறியல் போராட்டம் கைவிடப்படும்

—இப்படி சங்கம் அறிவித்து உள்ளது. (உ–எ)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சார நிலைய வீதி, இரண்டாம் ஒழுங்கை 15 – ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியீட்ட திகதி 26 – 12 – 1986.

Pinted and Published by Uthayan Publications (Private) Ltd. 15 Second Lane, Power-House Road, JAFFNA.

Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka Under Number QJ 60/N 86

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org